வெளியீடு எண். 63.

உ

சிவமயம்

திருப்பனந்தாள் தல வரலாறும் — — கும்பாபிஷேக மகத்துவமும்

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரஸ்வாமி தேவஸ்தான

மகாகும்பாபிஷேக நினைவு மலர்



1968

[விலை 70 பைசா

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

மகாகும்பாபிஷேக நினைவு மலர்

கீலக - ஆனி - 22 - வெள்ளிக்கிழமை

5—7—68



தருமபுர ஆதினம் 25-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அவர்கள்

வெளியீடு எண் 63.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் தல வரலாறு

இது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளப்பாங்கின்வண்ணம்

திருப்பனந்தாள்

ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது

1968

முதல் பதிப்பு 1943
இரண்டாம் பதிப்பு 1968

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

சிவமயம்

முன்னுரை

திருவருளுக்கு வாயிலாகிய குருவருளைப் பெறுவதற்கு வழி மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கி வணங்குவதாகும். இத்தகைய வணக்கச் செயல் நம் தமிழகத்தில் சிறப்பாக விளங்குவது. அதற்கு வாய்ப்பாக இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் இந்நாட்டில் பலப்பல. அவைகளில் தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்கள் மிகச் சிறப்புடையன. அத்தகைய தலங்களுள் காவிரியின் வடகரையில் விளங்கும் திருப்பனந்தாள் தாடகையீச்சரம் என்பது புகழ்பெற்ற ஒன்று. இது தருமையாதீனத்தின் ஆளுகைக்குட்பட்டுச் சிறந்துவிளங்குகின்றது.

இத்தலத்திற்குப் புராணம் ஒன்று உண்டு. எனினும் இத் தல வரலாறு முதலிய குறிப்புக்களைச் சுருக்கமாக மக்கள் அறிந்து பயன் கொள்ளுதற் பொருட்டு அமைந்தது திருப்பனந்தாள் தல வரலாறு என்னும் உரை நடை நூல். இதன் இரண்டாம் பதிப்பு பலரது நலங்கருதி இதுபொழுது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் வெளிவருகிறது.

அன்பர்கள் பலரும் இந்நூலைப் பெற்றுக் குருவருளும் திருவருளும் பெற்று உய்வார்களாக.

உ

சிவமயம்

பொருளடக்கம்

தொடர் எண்				பக்க எண்
1,	தலமும் இருப்பிடமும்	...	...	1
2.	தலப் பெயர்கள்	...	...	,,
3.	கோயிலமைப்பு	...	...	2
4.	மூர்த்திகள்	...	...	4
5.	தலப் பெருமை	...	...	5
6.	புராண வரலாறு	...	...	,,
7.	தீர்த்தங்கள்	...	...	11
8.	தல விருட்சம்	...	...	12
9.	வழிபட்டோர்கள்	...	...	,,
10.	சுற்றுக் கோயில்கள்	...	...	13
11.	மண்டபங்கள்	...	...	,,
12.	சிற்பங்கள்	...	...	,,
13.	நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்		...	14
14.	சொத்துக்கள்	...	...	15
15.	திருப்பணி	...	...	16
16.	சமயப்பணி	...	...	17
17.	நிர்வாகம்	...	...	18
18.	கல்வெட்டுக்கள்	...	...	,,
19.	தோத்திரப் பாடல்கள்	...	...	19



தாடகை பூசித்தல்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் தல வரலாறு

1. தலமும் இருப்பிடமும்

சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம்மேனியம்மான் ஆன்மாக்கள் முத்தி யின்பம் பெறும் பொருட்டு, கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலங்கள் பல. அவைகளுள் சோணாட்டில் காவிரியின் வடபால் விளங்கும் அறுபான் மும்மைத் தலங்களுள் திருப்பனந்தாள் என்பதும் ஒன்று. கும்பகோணத்தி (குடமூக்கி) ற்கு வடகிழக்கே 11 கல் தொலைவிலும், ஆடுதுறைக்கு வடக்கே 6 கல் தொலைவிலும் உள்ளது. தலத்தின் வடபால் 3 கல் தொலைவில் கொள்ளிட நதியின் முக்கியமான லோயர் (கீழ்) அணைக் கட்டு இருக்கிறது. ஆங்காங்கும் பஸ், வண்டி முதலிய போக்குவரத்துக்குரிய வசதிகள் உள்ளன.

2. தலப் பெயர்கள்

தல விருட்சம் பனை. ஆதலின் பனசை எனவும், பனந்தாள் எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. வட மொழிப் பெயர் தாலவனம் (தாலம் - பனை). ஆயினும் தாடகை பூசித்தமையால் ஆலயம் தாடகையீச்சரம் என்று

வழங்கப்படுகின்றது. 'தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகையீச்சரமே' என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் அருள்மொழி.

3. கோயிலமைப்பு

கோயில் ஊரின் நடுவே மிக அழகிய தோற்றத்துடன் விளங்குகிறது. உயர்ந்த மதில்களால் சூழப்பெற்றது. கீழ்புறமும், மேல்புறமும் சிற்பங்கள் செறிந்த இராஜ கோபுரங்களுடன் கூடிய வாயில்கள் விளங்குகின்றன. கோயிலின் உட்புறம் இரண்டு பிராகாரங்களும், மதிலின் புறத்தே மடவளாகமும், அழகிய நீண்ட வீதிகளும் இருக்கின்றன. இறைவன் சந்நிதானம் மேற்குமுகமாகவும், இறைவி சந்நிதானம் கிழக்குமுகமாகவும் விளங்குகின்றது. சுவாமிக்கும் அம்மையாருக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. மேலைக்கோபுரவாயிலின் உள்நுழைந்ததும் பதினாறுகால் மண்டபம் இருக்கிறது. அதன் வடபுறம் வாகனமிருக்குமிடமும், அதன் கீழ்பால் நாககன்னிகை தீர்த்தமும் உள்ளன. தீர்த்தம், தென்புறத்தில் திருமாளிகைப் பத்தியோடு கூடிய படிக்கட்டும், மற்றைய மூன்றுபுறமும் சாதாரண படிக்கட்டுகளும் அமைந்து விளங்குகின்றது. அத்திருமாளிகைப்பத்தியில் மேல்புறம் நாககன்னிகையம்மனும், கீழ்புறம் இலிங்கப் பிரதிட்டையும் இருக்கின்றன. மண்டபத்தின் தென்பால் களஞ்சிய அறையும், தேவஸ்தான காரியாலயமும், நூல்நிலையமும் ஒன்ருக அமைந்த கட்டிடங்கள் இருக்கின்றன. கீழ்பால் பலிபீடமும், அதனடியில் விநாயகரும், துவஜஸ்தம்பமும், நந்தி மண்டபமும் விளங்குகின்றன. அப் பிராகாரத்தில் வடகீழ் மூலையில் யாகசாலை இருக்கிறது.

இரண்டாங்கோபுரத்திற்குள் சென்றதும் பஞ்சமூர்த்தி மண்டபம் அழகிய ஓவியங்களுடனும், பஞ்சமூர்த்திகளின் சுதைச் சிற்பங்களுடனும், குங்குலியக்கலயர், சொக்கநாதர், நர்த்தன விநாயகர் சந்நிதிகளுடனும் திகழ்கிறது. இப் பிராகாரத்தைத் திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் அழகு செய்கின்றன. இத் திருச்சுற்றில் கீழ்ப்பக்கத்தில் தல விருக்ஷமும், அதன் பக்கத்தில் தாடகை பூசை செய்த ஐதிகத்தில் அமைந்த இலிங்கப் பிரதிட்டையும் இருக்கின்றன. அங்கு ஒரு கிணறு ‡ இருக்கிறது. வடகிழக்கு மூலையில் ஓர் யாகசாலையும் இருக்கிறது. இதை அடுத்து நவக்கிரக மண்டபம் இருக்கிறது. தென் திருமாளிகைப் பத்தியில் சமயாசாரியர்கள் பிரதிட்டையாகி இருக்கின்றனர். அப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதானத்துடன் ஆண்ட விநாயகர் ஆலயம் அமைந்திருக்கிறது. ஆஸ்தான மண்டபத்தில் ஊர்த்துவதாண்டவமூர்த்தி பிரதிட்டையாகி இருக்கிறது.

சுவாமி கோயில் வடமேற்குமூலையில் சுப்பிரமணியர் (மூலவர்), நடராஜர் சபை, முத்துக்குமாரசுவாமி (உற்சவர்), இலக்குமி ஆகிய மூர்த்திகள் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றனர். கீழைப் பிராகாரத்தில் பஞ்சபூத இலிங்கங்கள், பைரவர், சூரியன், சந்திரன், தென் கிழக்கு மூலையில் காட்சி கொடுத்த நாயனர், தென் பிராகாரத்தில் அறுபான்மும்மை நாயன்மார், பிராமியாதி சப்த மாதாக்கள், உத்ஸவ மூர்த்திகள், மேல் பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் ஆகியோர்கள் எழுந்தருளியிருக்கின்றனர்.

---

‡ இது நாககன்னிகை பிலம். இதன் வழியாக நாக கன்னியர் வந்து பெருமானை வழிபட்டதாக ஐதிகம்.

சுவாமி கர்ப்பக்கிரகத்தின் வடபக்கத்தில் துர்க்கை அழகிய விமானத்துடன் விளங்குகிறது. வடகிழக்கில் தனி ஆலயத்தில் சண்டேசரும், தென்புறம் தக்ஷிணாமூர்த்தியும் பிரதிட்டையாகி யிருக்கின்றனர்.

சுவாமி கர்ப்பக்கிரக விமானம் பிரணவாகாரமாக மூன்று ஸ்தூபியுடன் விளங்குகிறது.

அம்மையார் ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில் சண்டிகேசுவரியும், சந்நிதானத்தில் ஆடிப்பூர அம்மனும், பள்ளியறையும், தேவார பாராயண மண்டபமும் விளங்குகின்றன.

4. மூர்த்திகள்

மூலத்தான மூர்த்தி சுயம்புவாக விளங்குகிறார்.

இறைவன் திருநாமங்கள் :— அருணஜடேசுவரர், செஞ்சடைவேதியர், செஞ்சடையப்பர், செஞ்சடைநாதர், ஜடாதரர், சடையப்பர், தாலவனநாதர்.

இறைவி திருநாமங்கள் :— பிரகந்நாயகி, பெரியநாயகி, பெரிய பெருமாட்டி, தாலவனநாயகி.

குங்குலியக்கலயர், அவரது மனைவி, தனையன் (உற்சவர்) திருவுருவங்கள் இருக்கின்றன.

5. தலப் பெருமை

இத்தலம் உமையம்மையார் சிவபூசையியற்றி ஞானோபதேசம் பெற்ற சிறப்புடையது. தாழை மலரைச் சான்று காட்டி சிவபெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறிய பிரமனுக்கு அதனாலேற்பட்ட பாதகத்தைப் போக்கியது. இந்திரனுக்கு விருத்திராசுரனைக் கொன்ற பாதகமும், கௌதமர் மனைவியைக் களவாற் சேர்ந்த தோஷமும் போக்கி அருள்பாலித்தது. பிருந்தையைப் புணர்ந்த திருமாலுக்கு அருள்செய்தது. தக்கனுடன் கூடி சிவத்துரோகத்தில் ஈடுபட்ட சூரியனுக்கு அத்துரோகத்தால் உண்டான பாவத்தைத் தீர்த்தது. குருபத்தினியைக்கூடின சந்திரனுக்கு மாபாதகத்தை நீக்கியது. அகத்தியரால் பூசித்து வழிபடப்பெற்றது. ஆதிசேடனால் பூசிக்கப்பெற்றது. தாடகை, சிவபூசையின்போது அணிவித்த மாலையை ஏற்றுக்கொள்ள திருமுடி சாய்ந்திருந்த இறைவனைக் குங்கிலியக்கலய நாயனார் அன்புக் கயிற்றால் இழுத்து நிமிர்த்தி வழிபட்டது. வாசுகியின் மகளாகிய சுமதி என்னும் நாககன்னிகையால் பூசிக்கப்பெற்றது. மேற்கூறிய ஒவ்வொருவரும் தத்தம் பெயரால் தீர்த்தங்கள் அமைத்து சிவலிங்கப் பிரதிட்டையும் செய்துள்ள பெருமைமிக்கது. அவ்வத் தீர்த்தங்களில் அன்போடு மூழ்கியவர்களின் பவப்பிணி மாய்த்துப் பெரும்பேறடையச் செய்வது இத்தலம்.

6. புராண வரலாறு

அம்மையார் ஞானோபதேசம் பெற்றது :— முன்னொரு கற்பத்தில் அம்மையார் இறைவனை வணங்கி 'ஞானோப

தேசம் புரிந்தருளல் வேண்டும்' எனப் பிரார்த்திக்க, இறைவன் "நீ தாலவனம் சென்று எம்மைப் பூசித்தால் அருள் செய்வோம்" என்றுரைத்தனர். அம்மையாரும் இறைவன் ஆணைப்படி இத்தலத்துவந்து எதிர்முகமாக வடபுறத்தமர்ந்து தவஞ்செய்தாள். இறைவன் காட்சி யளித்து அம்மையாருக்கு ஞானத்தை உபதேசித்து அருள் செய்தனர். இவ்வுண்மையினையே இறைவர் மேற்குமுக மாக எழுந்தருளியிருப்பதும், இறைவி கிழக்குமுகமாக எழுந்தருளியிருப்பதும் வலியுறுத்தும். அம்மையார் உப தேசம் பெறுமுன் பாலாம்பிகை எனவும், உபதேசம் பெற்றபின் பிரகந்நாயகி எனவும் பெயர் வழங்கப்பெறு கின்றார்.

ஐராவதம் :— அசுரர்கள் அல்லலுக்கு ஆற்றாராகிய அமரர்கள் ஓடிவந்து இந்திரனிடம் முறையிட்டார்கள். செவியேற்ற இந்திரன் 'போர் புரிதற்கு ஐராவதத்தைக் கொண்டுவருக' எனப் பணிக்க, ஏவலாளர்கள் தேடிக் காணாது மயங்கினர். ஐராவதம் போகத்தை விரும்பி மண்ணுலகத்துள்ள மந்தர மலையை அடைந்திருக்கிறது என உணர்ந்தனன் இந்திரன். தனது சமயத்துக்கு உதவாத காரணத்தால் 'தெய்வவலி யிழந்து காட்டானை யாகுக' எனச் சபித்தனன். ஐராவதமும் மண்ணுலகத் தில் காட்டானையாகத் திரிந்தது. தன்னெதிர்ப்பட்ட நாரதரை வணங்கி, அவராணைப்படியே இத் தலத்திற்கு வந்தது. தாலவனநாதரை வணங்கித் தன் சாபத்தைப் போக்கிக்கொண்டது. தன் பெயரினால் மேல்பால் ஓர் தடாகமும், சிவலிங்கப் பிரதிட்டையும் செய்து பூசித்துத் தன்னுலகடைந்தது.

தாடகை :— தாடகை மகப்பேறு விரும்பித் தவமியற்றுங்கால், பிரமதேவன் தோன்றி 'நீ தாலவனஞ் சென்று பூசித்து வழிபட்டால் விரும்பிய பேற்றைப் பெறு வாய்' எனப் பணித்தனன். தாடகையும் அவ்வாறே இத் தலத்திற்கு வந்து நியமந் தவறாது விதிப்படி இறை வனைப் பூசித்துவந்தாள். ஒருநாள் பூசை முடிவில் மாலை யைச் சாத்த எழுந்தகாலத்து அன்பை வெளிப்படுத்திவிடும் படி இறைவன் அவளுடைய ஆடையை நெகிழச் செய் தனன். தாடகையும் ஆடையை இரு முழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டு, 'அண்ணலே! யாது செய்வேன்; எவ் வாறாயினும் இம்மாலையை ஏற்று அடியேனை ஆதரித்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்தாள். இறைவனும் தன் திருமுடி சாய்த்து மாலையினை ஏற்றுக்கொண்டனன். உடனே அவளுக்குப் பதினாறு கரங்கள் தோன்றின. அவளும் பெருமானது கருணையை வியந்து தோத்தரிக்கப் பெருமானும் இடபாரூடராய்க் காட்சி தந்தனன். அப் போது அவள் பணிந்து வணங்கி, 'அடியேனுக்கு மகப் பேறு அளிப்பதோடு அடியேனுக்குத் தேவரீர் அருள்பா லித்ததை யாவரும் நினைவு கூர்தற்காக இத் தலத்துக்கு அடியேன் பெயர் வழங்கிவர வேண்டும்' என விண்ணப் பித்தனள். பரமனும் 'அவ்வாறே ஆகுக' எனப் பணித்து மறைந்தனன். தாடகையும் ஆலயத்திற்கு வடபால் ஓர் தீர்த்தமமைத்துத் தென்கரையில் வீரியம்மனையும், கீழ் கரையில் வைரவரையும் காவலாகப் பிரதிட்டித்து வணங்கி மகப்பேற்றையும் அடைந்தாள்.

குங்குலியக்கலயர் :— திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். நாடோறும் இறைவனது சந்நி தானத்தில் குங்குலிய தூபம் இடும் பணி யியற்றிவந்ததால்

இவர் குங்குலியக்கலயர் என்று அழைக்கப்பெற்றார். அவருக்குத் திருவருளால் வறுமை யுண்டாகியும் தம் பணி யில் தவறினாரல்லர். ஒருநாள் அவர் மனைவியார் உணவு சமைத்தற்கு ஒன்றும் இல்லாமையால் தம்மிடம் எஞ்சி யிருந்த திருமங்கிலியத்தைக் கணவர் கையில் கொடுத்து 'உணவுப் பொருள் வாங்கிவாரும்' என்றனர். நாயனாரும் அதனை வாங்கிக்கொண்டு செல்லுங்கால் இறைவன் ஓர் குங்குலிய வணிகன் போன்று பொதிகொண்டு எதிரே வந்தனன். அதனைக் கண்டார் நாயனார்; மனமகிழ்ச்சி கொண்டார். சென்ற காரியத்தை மறந்தார். கையி லிருந்த திருமங்கிலியத்தைக் கொடுத்துப் பொதியை வாங் கிக்கொண்டு ஆலயத்திற்குச் சென்று பணியியற்றிக் கொண் டிருந்தார். அன்றிரவு இறைவன் அருளால் வீடு மாளிகை யாயிற்று; செல்வங்கள் நிறைந்தன; உணவுப்பொருள்கள் மிகுந்தன; மனைவியாரும் விழித்தெழுந்து திருவருளை வியந்து கணவருக்கு உணவு அமைக்க முற்பட்டார். இறைவர் நாயனாரிடத்தில் தோன்றி 'நீ வீடு சென்று பசி நீங்குக' என அருள்செய்தார். நாயனாரும் வீடு சென்று எல்லாவற்றையுங் கண்டு இறைவன் கருணையை வியந்து ஆனந்தபரவசராயினார்.

நாயனார் இவ்வாறு சிவப்பணி செய்துகொண்டிருக்க சோழ அரசனாகிய வீரசேனனென்பவன், இத்தலத்திறை வன் தாடகையின் அன்புக்காகத் தலைசாய்ந்திருப்பதைக் கேள்வியுற்று இறைவன் திருமுடியை நிமிர்த்தி வழிபட எண்ணினான். யானை, குதிரை முதலியவைகளைக் கட்டி இழுப்பித்தான். முயற்சி பயனளித்திலது. கவலைக்கடலில் ஆழ்ந்தான். இச் செய்தி கடவூர்க் கலயருக்கு எட்டியது. இத் தலத்திற்கு வந்தார். தாமும் அத் திருப்பணியில்



பெருமானை நிமிர்த்த அரசன் சேனைகளைக்கொண்டு
முயற்சித்தல்

ஈடுபட விரும்பினர். யானைகளை அவிழ்க்கச்செய்து தம் கழுத்தில் அரிகண்டமும் இறைவர் கழுத்தில் மெல்லிய கயிறும் பூட்டி இழுத்தார். அரிகண்டம் கழுத்தை அறுக்கத் தொடங்கியது. உடனே பெருமான் தமது திருக்கரத்தைத் தோற்றி, சிரசின்மீது வைத்தருள, அறுபட்ட சிரசும் பொருந்தியது. இறைவன் திருமுடியும் நிமிர்ந்தது அது கண்ட அரசன் அன்புக்கயிற்றால் நாயனர் இழுத்து நிமிர்த்ததைக் கண்டான்; வணங்கினன்; எண்ணி எண்ணி வியந்தான்; விடைபெற்றுச் சென்றான்.

பின்னொருநாள் நாயனர் இறைவருக்கு ஆவுடையார் செய்து சார்த்த நினைத்து, அளவெடுத்துக்கொண்டு, மலைநாடு சென்று ஆவுடையாரைச் செய்துவந்து சார்த்த, இறைவர் தம் திரு உருவத்தைப் பெரிதாக்கிக்கொண்டார். அது அளவு குறைந்து சார்த்தமுடியாமற் போயிற்று. உடனே நாயனர் 'எண்ணிய காரியம் முடிவுபெறவில்லையே; இனி உயிர்விடுதலே மேல்' என்று துணிய, இறைவர் தாம் ஏக்கிக்கொண்டு அதனை யேற்று அருள் பாலித்தார்.

அவ்வமயம் தனது மகன் இறந்த செய்தி தெரிந்து வீடு சென்று இதுவும் திருவருட் செயல் போலும் என எண்ணி மகனை எடுத்துக்கொண்டு ஈமக் கடன் முடிக்கச் சென்றார். வழியில் உள்ள * விநாயகர் அசரீரியாக அருளியபடி, நாயனர் அவ்வுடலைக் கொண்டுவந்து நாககன்னிகை தீர்த்தத்தில் நனைக்க, மகனும் உயிர்பெற்று

---

* இன்றும் 'பிணமீட்ட விநாயகர்' என்ற திருநாமத்துடன் திருவீதியின் வாயுமூலையில் எழுந்தருளியுள்ளார்.

எழுந்தான். இவ்வாருக நாயனுர் சிலகாலம் இங்குத்தங்கி இறைபணி யியற்றிப் பின்னர் தம் ஊருக்கேகினர்.

நாககன்னிகை :— நாகலோகத்தில் வாசுகி தன் மகள் சுமதிக்கு மணஞ்செய்விக்கக் கருதியகாலே, சுமதி 'அதைப்பற்றிய முயற்சி தங்கட்கு வேண்டாம்' எனக் கூறி, கன்னிமாடத்தமர்ந்திருந்தாள். இறைவன் அவளது கனவிற்றேன்றி, 'நீ தாலவனமடைந்து பூசிப்பாய்' என அருள்செய்தனன். சுமதியும் அவ்வாறே பிலத்தின் வழியாக வந்து அம்மையார் சந்நிதானத்திலுள்ள கூபத்தில் தோன்றி இறைவனே வழிபட்டுவந்தாள். தலயாத்திரை செய்துவரும் அரித்துவசன் என்னும் அரசனும் இத் தலத்தை யடைந்தான். சுமதி அவனேக் கண்டு விருப்ப முற்று, நாகலோகத்திற்கு அழைத்துச்சென்று மணஞ் செய்து கொண்டாள். சிலநாள் அங்கிருந்து மீண்டும் பிலத்தின் வழியாக வந்து அம்மையாருக்கு மேல்புறம் ஓர் தடாகமமைத்து நாடோறும் வழிபாடியற்றிவந்தாள். அரித்துவசனும் ஆலயத்திற்குத் தென்பால் ஓர் தடாகமும் இலிங்கமும் அமைத்தான் இவ்வாறு இருவரும் இறைவனேப் பூசித்துப் பல திருப்பணிகளும் செய்து முத்தியின்பம் பெற்றுர்கள்.

சங்குகன்னன் :— இவன் வேடுவர் தலேவன். நாரதர் ஆணேப்படி இத்தலத்து வந்து, தீர்த்தங்களில் நீராடி, தாலவனநாதரைப் பூசித்து, விரும்பியபடி மகப் பேற்றை யடைந்தான்.

நாகுகன்னன் :— இவன் அந்தணர் குலத்தில் உதித் தவன். பிதிர்க்கடனுக்காக வைத்திருந்த பொருள்களே

அபகரித்ததால் நரகத்துன்பமடைந்து இறுதியில் வேடுவனுகப் பிறந்தான். வழிப்போவார் பொருள்களைக் கவர்ந்து உயிர்வாழ்ந்து வந்தான். ஒருநாள் தலயாத்திரை செய்து வரும் முனிவர்களுடைய பொருள்களை அபகரிக்க எண்ணி அவர்களைப் பின்ருெடர்ந்துவந்தான். இத்தலத்தெல்லைக்கு வந்ததும் நல்வினைப் பயனுலே வந்த காரியத்தை மறந்து மூன்றுநாள் தாலவனநாதரைப் பூசித்துத் திருவாதிரைத் திருநாளன்று சிவலோகம் சார்ந்தான்.

7. தீர்த்தங்கள்

பிரம தீர்த்தம், ஐராவத தீர்த்தம், தாடகை தீர்த்தம் விட்டுணு தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், அரித்துவச தீர்த்தம், நாககன்னிகை தீர்த்தம், தருமசேன தீர்த்தம், கூபதீர்த்தம், மண்ணியாறு மூதலாகிய பல தீர்த்தங்கள் ஆலயத்தின் உள்ளும் புறம்பும் இருக்கின்றன.

நாககன்னிகை தீர்த்தம் :— சுவாமிசந்நிதியில் மேலை இராஜகோபுரத்தின் வடபால் கோயிலுக்குள் அமைந்துள்ளது. நாககன்னிகையரால் தோற்றுவிக்கப்பெற்றது. இதில் மூழ்கினோர் சகல பிணிகளும் நீங்கப்பெறுவர்,

மண்ணியாறு :— அம்மையார் விருப்பத்தின்படி முருகப்பெருமானுல் அழைக்கப்பட்டது. இறைவனது சந்நிதானத்தில் இரண்டுபர்லாங் தொலைவில் வடக்கு நோக்கி ஓடுகின்றது,

8. தல விருட்சம்



பனைமரம் :— இது இரண்டாவது பிராகாரத்தில் அம்மையார் ஆலயத்தின் எதிரிலுள்ளது. இரண்டு மரங்கள் இருக்கின்றன. இதன் பக்கல் பெருமான் தாடகையினது அன்புக்கிரங்கி திருமுடி சாய்த்து அருள்பாலித்த (அவசரம்) மூர்த்தமிருக்கிறது.

தல விருட்சம் (பனை)

9. வழிபட்டோர்கள்

பிரமன், திருமால், இந்திரன், ஐராவதம், அகத்தியர், சந்திரன், சூரியன், ஆதிசேடன், நாககன்னிகை, தர்மசேனன், எக்ஞதுப்தன், தாடகை குங்குலியக்கலய நாயனுர், சங்குகன்னன், நாகுகன்னன் முதலியோர் பலரும் வழிபட்டுப் பேறுபெற்ருர்கள்.

10. சுற்றுக் கோயில்கள்

ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் ஊருடையப்பர் கோயில் இருக்கிறது. மேலும் ஐயனர், மாரியம்மன் முதலிய தெய்வங்களுக்கும் சிறு சிறு கோயில்கள் இருக்கின்றன.

ஊருடையப்பர் ஆலயம் பிரமன் வழிபட்டது. இது பிரமனல் அலங்கரிக்கப்பட்ட அலங்காரங்களை அகற்றி விட்டு சாபவிமோசனத்தை நீக்கிக்கொள்ள விரும்பிய ஐராவதம் வழிபட்டுவந்தது. அதனைக் கண்டு கலக்க முற்ற பிரமன் திருமாலைக் குறித்துத் தவமியற்றி அவன் அருளால் சிங்கமுகத்துடன் இம்மாடக்கோயிலை அமைத்து வழிபட்டு வேண்டியன பெற்றுன். இந்த ஐதிகத்தில் இதன் மேற்கில் விஷ்ணு ஆலயம் ஒன்றும் அமைந்திருக்கிறது.

11. மண்டபங்கள்

அலங்கார மண்டபம், பஞ்சமூர்த்திகள் மண்டபம் பதினறுகால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், வாகன மண்டபம் முதலிய பல மண்டபங்கள் இருக்கின்றன.

12. சிற்பங்கள்

சிற்பங்கள் பல்லவர்கால வேலைப்பாடு உடையன. மிக அழகிய சிற்பங்கள் ஆங்காங்கும் காணப்படுகின்றன.

பதினாறுகால் மண்டபத்தில் தாடகையினால் சார்த்தப் பட்ட மாலையினை ஏற்றுக்கொள்வதற்குப் பெருமான் திரு முடி வளைத்தருள்செய்ததும், அதனை நிமிர்த்தற்கு அரசன் யானைகளைக் கட்டி இழுத்ததும், அது நிமிராதது கண்டு குங்குலியக்கலய நாயனார் தம் கழுத்தில் கயிறு கட்டி இழுத் ததும், அப்போது அவ்விலிங்கத்தினிடையே இறைவரது திருக்கரம் தோன்றியதும், உடனே நாயனார் தம் மனைவி மக்களுடன் வழிபட்டதுமான உருவங்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன.

சிங்கவாயிலினுள் நுழைந்ததும் வடபுற மதிலில் திருக் குறிப்புத்தொண்டர் வரலாற்றினை ஒட்டிச் சில உருவங்கள் அமைந்திருக்கின்றன.

சுப்பிரமணியர் உற்சவருக்குப்பின் தாடகை, பெரு மானை வழிபட்டுப் பதினாறு கைகள் பெற்ற ஐதிகம் செதுக் கப்பெற்றிருக்கிறது. கோயில் கட்டிய தரணிநக்கனார் சிற்பமும் அமைக்கப்பட்டிருக்கிறது,

இரண்டாங்கோபுரத்தினுள் நுழைந்ததும் வௌவால் நெற்றி மண்டபத்தில் சுதையினால் (பழங்கால வேலைப் பாடு) பஞ்சமூர்த்திகளும் வேலை செய்யப்பட்டிருக்கின்றன.

13. நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்

காரண, காமிக ஆகமப்படி ஆறுகால பூஜைகள் நாடோறும் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கந்தசஷ்டி, ஆடிப்பூரம் முதலிய விழாக்களும் நடத்தப்பெறுகின்றன.



தேர் நிலைகள்

ஆவணி அமாவாசையன்று பிரமன் பூசித்துப் பேறு பெற்ற ஐதிகத்தில் பெருமான் பிரம தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுத்தருளுவர். மார்ச்சு, செப்டம்பர் மாதங்களில் சூரியன் பூசித்த ஐதிகத்தில் குறிப்பிட்ட நாட்களில் சூரிய கிரணங்கள் பெருமான்மீது படுகின்றன. அன்று பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

கார்த்திகைத்திங்கள் சுக்கிரவாரத்தில் அம்மையார் நாககன்னிகை தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளுவர்.

14. சொத்துக்கள்

நன்செயில் 757-33 ஏக்கரும், புன்செயில் 286·25 ஏக்கரும் இருக்கின்றன. பதினான்கு வீடுகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளியில் பல்லக்கு, இடபம் முதலிய வாகனங்கள் இருக்கின்றன. யானை வாகனம் முதலிய மர வாகனங்கள் வர்ணம் தீட்டி இருக்கின்றன, தேர் இரண்டும் அவ்வூர் ஸ்ரீ காசி மடத்திலிருந்து அளிக்கப்பெற்றவை. ஆலயத்திற்குப் போதுமான திருவாபரணங்கள் இருக்கின்றன. பழய வேலைப்பாடுள்ள கண்கவர் கண்ணாடி மயில் வாகனம் ஒன்றிருக்கிறது.

15. திருப்பணி

பிராகாரங்களில் தளவரிசை போடப்பட்டிருக்கிறது. மடப்பள்ளியின் பின்புறம் உள்ள கீழ்புறத் திருமதில் பழுதாயிருந்ததால் முழுமையும் இடித்துப் புதிதாகக் கட்டப்பட்டது. ஆஸ்தான மண்டபத்திலும், பஞ்சமூர்த்தி மண்டபத்திலும் கருங்கற்றளவரிசை போடப்பட்டது. நாககன்னிகை தீர்த்தம் சேறுவாரி படிக்கட்டுகளும் திருத்தப்பட்டன. தேர் சீலைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. பசுமடம் தளவரிசை போடப்பட்டது. கட்டளை மடம் பூராவும் இடித்தெடுத்துப் பெருஞ்செலவில் நவீன முறையில் மிக அழகாகக் கட்டப்பட்டது. மட்டியூர் என்ற கிராமத்தில் செங்கழுநீர் ஓடை ஒன்று புதிதாக அமைத்து நாடோறும் பூஜைக்குச் செங்கழுநீர்ப் புஷ்பம் உபயோகமாகும்படிச் செய்யப்பட்டிருக்கிறது. தேவஸ்தான காரியாலயம், களஞ்சியம் முதலிய பழைய கட்டிடங்களை இடித்தெடுத்துவிட்டுப் புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. நந்தவனத்திற்கும் சுற்றுச் சுவர் கட்டி இரும்பில் அழகான கதவுகள் போடப்பட்டிருக்கின்றன. புஷ்பச் செடிகளும் புதுப்பித்துப் போடப்பட்டிருக்கின்றன. முதல் இரண்டாம் சுற்றுமதில் பூராவும் சிமிட்டி பூசப்பட்டிருக்கிறது.



குங்குலியக்கலய நாயனார் பெருமானை நிமிர்த்த
முயற்சித்தல்.

திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் சிமிட்டி பூசித் தளவரிசைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மர வாகனங்கள் ரிப்பேர்செய்யப்பட்டன. நடராஜா மஞ்சம் வெள்ளித் தகடு போடப்பட்டது. மூன்று ரிஷப வாகனங்கள் வெள்ளித்தகடுபோட்டுப் புதியதாய்ச்செய்யப் பட்டன. நடராஜா, சுவாமி அம்மன், சோமாஸ்கந்தர் முதலிய கோயில்களின் நிலைகளுக்கும் படிகளுக்கும் பித்தளைத் தகடு போடப்பட்டது. தேவஸ்தானத்துக்கு ஒரு யானை வாங்கப்பட்டது. யானைக்கு ஒட்டுக்கட்டடம் கட்டப்பட்டது. சுவாமி, அம்மன் கோயில்கள், கோபுரங்கள், இராஜகோபுரம், கட்டைக்கோபுரம், சுவாமி, அம்மன், விநாயகர், சண்டிகேஸ்வரர் கோவில்களின் விமானங்கள், இவைகளில் பூராவும் சுதை வேலை செய்து எண்ணெ வர்ணக் கலர் வைக்கப்பட்டது. எல்லா மண்டபங்களின் உள்ளேயும் சித்திரங்கள் எழுதப்பட்டன. எல்லாத் திருப்பணி வேலைகளும் செய்யப்பட்டு 1968 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

16. சமயப்பணி

சித்திரை விழா, நவராத்திரி விழா, ஆடிப்பூர விழா போன்ற திருநாட்களிலும் ஏனைய சிறப்பு நாட்களிலும் ஆதீனப் பிரசாரகர்களைக் கொண்டும், பல அறிஞர்களைக் கொண்டும் சமயச் சொற்பொழிவுகள் செய்விக்கப்பெறுகின்றன. ''குங்குலியக்கலயர் அன்பின் திறம்'' என்னும் உரைநடைநூல் அச்சிடப்பெற்று வழங்கப்படுகின்றது. தல வரலாறு அச்சிடப்பெற்றுள்ளது.

17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீன கர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (20—6—1945) முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.

18. கல்வெட்டுக்கள்

1908, 1914, 1932 ஆகிய வருஷங்களில் கவர்ன்மெண்டார் கல்வெட்டுப் பரிசோதகர்களைக் கொண்டு கல்வெட்டுக்களைப் படி எடுத்திருக்கின்றார்கள். அதில் சில கல்வெட்டுக்கள் சரித்திரசம்பந்தமுள்ளனவாகக் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு, இறைவன் கொள்ளிட நதிக்குத் தீர்த்தம் கொடுக்கப் போவதற்குப் புதிய பாதை ஒன்று அமைத்த செய்தியைக் கூறுகின்றது.

உ
சிவமயம்

தோத்திரப் பாடல்கள்

தேவாரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினன் றிகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 1

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இய லேழுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளந் தன்னைத்
தரித்தவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 2

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல்லார் வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமொர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சமுதா மிக்க மாதவர் வேள்வியைமுன்
தடுத்தவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 3

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக வேத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் புனல் பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 4

விடம்படு கண்டத்தினன் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினன் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 5

விடையுயர் வெல்கொடியான் அடி விண்ணொடு மண்ணு
[மெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன்னெருக்
[கும்மணிந்த
சடையவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 6

மலையவன் முன்பயந்த மட மாதையொரு கூறுடையான்
சிலைமலி வெங்கணையாற் புரம் மூன்றவை செற்றுகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடரவும் அணிந்த
தலையவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே, 7

செற்றரக் கன்வலியைத் திரு மெல்விரலால் அடர்த்து
முற்றும்வெண் ணீறணிந்த திரு மேனியன் மும்மையினன்
புற்றர வம்புலியின் னுரி தோலொடு கோவணமுந்
தற்றவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 8

வின்மலை நாணரவம் மிகு வெங்கனல் அம்பதனால்
புன்மைசெய் தானவர்தம் புரம் பொன்றுவித் தான்புனிதன்
நன்மலர் மேலயனும் நண்ணு நாரணனும் அறியாத்
தன்மைய னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 9

ஆதர் சமணரொடும் மடை யைந்துகில் போர்த்துழலும்
நீத ருரைக்குமொழி யவை கொள்ளன்மின் நின்மலனூர்
போதவிழ் பொய்கைதனுள் திகழ் புள்ளிரி யப்பொழில்வாய்
தாதவி ழும்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 10



தாடகை பதினாறு கைகள் அருளப்பெற்றமை

தண்வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகையீச்சரத்துக்
கண்ணயலேபிறையான் அவன் தன்னைமுன்காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம் பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

— **திருஞானசம்பந்த சுவாமிகள்**

திருச்சிற்றம்பலம்

வீழி மிழலை வெண்காடு வேங்கூர்
வேதி குடி விசயமங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையாலங் காடு மரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடனாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்

— **திருநாவுக்கரசு சுவாமிகள்**

பதினொன்றாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கரமூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரமூன்றி வாய்குதட்டா முன்னம் — புரமூன்றும்
தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
வீச்சரத்தான் பாதமே ஏத்து.

திருச்சிற்றம்பலம்

— **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**

திருச்சிற்றம்பலம்

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான்என்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்கிலி யங்கொண் டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே.

திருச்சிற்றம்பலம்

— நம்பியாண்டார் நம்பிகள்

திருஞானசம்பந்தர் புராணம்

திருச்சிற்றம்பலம்

இன்னிசை வண்டமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினர்.

திருச்சிற்றம்பலம்

குங்குலியக்கலய நாயனர் புராணம்

திருச்சிற்றம்பலம்

செங்கண்வெள் ளேற்றின்பாகன் திருப்பனந் தாளில்மேவும்
அங்கணன் செம்மைகண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழமெல்லாம் பூட்டவும் நேர்நில்லாமைக்
கங்குலும் பகலும்தீராக் கவலையுற் றழுங்கிச்செல்ல.

மன்னவன் வருத்தங்கேட்டு மாசறு புகழின்மிக்க
நன்னெறிக் கலயனர்தாம் நாதனை நேரேகாணும்
அந்நெறி தலைநின்ருனென் றரசனை விரும்பித்தாமும்
மின்னெறித் தனையவேணி விகிர்தனை வணங்கவந்தார்

மழுவுடைச் செய்யகையர் கோயில்கள் மருங்குசென்று
தொழுதுபோந் தன்பிேைடுந் தொன்மறை நெறிவழாமை
முழுதுல கினையும்போற்ற மூன்றெரி புரப்போர்வாழும்
செழுமலர்ச் சோலைவேலித் திருப்பனந் தாளிற்சேர்ந்தார்.

காதலால் அரசனுற்ற வருத்தமுங் களிற்றிேைடும்
தீதிலாச் சேனைசெய்யுந் திருப்பணி நேர்படாமை
மேதினி மிசையேஎய்த்து வீழ்ந்திளைப் பதுவும்நோக்கி
மாதவக் கலயர்தாமும் மனத்தினில் வருத்தம்எய்தி.

சேனையும் ஆனைபூண்ட திரளும்எய்த் தெழாமைநோக்கி
யானுமிவ் விளைப்புற்றெய்க்கு மிதுபெற வேண்டும்என்று
தேனலர் கொன்றையார்தந் திருமேனிப் பூங்கச்சேய்ந்த
மானவன் கயிறுபூண்டு கழுத்தினல் வருந்தலுற்ருர்.

நண்ணிய ஒருமைஅன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர்பூட்டி இளைத்தபின் திறம்பிநிற்க
ஒண்ணுமோ கலயனூர்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரே நின்ருர் அமரரும் விசும்பில்ஆர்த்தார்.

திருச்சிற்றம்பலம்

— சேக்கிழார்

திருப்புகழ்

கொந்தார் மைக்குழ லிந்தார் சர்க்கரை
என்றே செப்பிய மொழிமாதர்
கொங்கார் முத்துவ டந்தா னிட்டத
னந்தா னித்தரை மலைபோலே

வந்தே சுற்றிவ ளைந்தா லற்பம
　　னந்தா னிப்படி　　　　　　　　　　　யுழலாமல்
　　மங்கா நற்பொரு ளிந்தா வற்புத
　　　　மென்றே யிப்படி　　　　　　　　　　அருள்வாயே
இந்தோ டக்கதிர் கண்டோ டக்கட
　　மண்டா நற்றவர்　　　　　　　　　　　குடியோட
　　எங்கே யக்கிரி எங்கே யிக்கிரி
　　　　என்றே திக்கென　　　　　　　　　　வருசூரைப்
பந்தா டித்தலை விண்டோ டக்களம்
　　வந்தோ ரைச்சில　　　　　　　　　　　ரணகாளி
　　பங்கா கத்தரு கந்தா மிக்கப
　　　　னந்தா ளுற்றருள்　　　　　　　　　　பெருமாளே.

— அருணகிரிநாதர்

பிள்ளைத்தமிழ்

அனையுமைக் கருண்ஞான வுபதேசம் வைத்தவன்
　　அயனுக்கு மருள்செய்தவன்
　　அணிகே தகைக்குமருள் செய்தவன் பைப்பொனுட்
　　　　டயிராவ தத்தையாண்டோன்
நினைவரிய தாடகைக் கருண்மேனி சாய்ந்தவன்
　　நிமிராமல் மன்னனுக்கு
　　நிறைகலைய ருக்கு முன்போல் நிமிர்ந்தவன்
　　　　நிறைகலைய ரளித்த

தனையனுயிர் போனபின் மீட்டநா யகன்வாகை
சாத்து‡மா விடையார்தனைத்
தானெக்கி யேதரித் துக்கொண்டு நீண்டசெஞ்
சடைவேதி யன்புதல்வனே
பனசையம் பதிமேவு தண்டீசர் ஐயனே
பவளவாய் முத்தமருளே
பைம்பொனிற வயிரா வதப்பிள்ளை யார்தம்பி
பவளவாய் முத்தமருளே.

— சிதம்பர முனிவர்

தனிப் பாடல்

விண்ணீரும்வற்றிப் புவிநீரும்வற்றி விரும்பியழக்
கண்ணீரும்வற்றிப் புலவோர்தவிக்கின்ற காலத்திலே
உண்ணீருண்ணீரென் றுபசாரம்பேசி யுண்மையுடன்
தண்ணீரும்சோறும் தருவான்றிருப்பனந் தாட்பட்டனே.

— காளமேகப் புலவர்

சடையப்பர் மாலை

கலைவளர் மதியுங் கடுக்கையும் பாம்புங்
கவினுறு நதியையு மிலைந்த
தலைவளர் நினது திருவுருவோடுந்
தமியனேன் காணவந் தருள்வாய்

‡ "மறையுடையாடனைத், தானத்தி யேதரித்து" எனவும் பாடம்.

முலைவளர் மடவார் சூழ்ந்திடும் பனசை
முதற்பெரும் பதியினி லிமய
மலைவளர் பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

பரமொளிர் சோழ னூற்பெரும் படையிற்
பருவடம் பூட்டிமுன் னீர்த்துந்
திரமொளிர் நினது திருவுருக் கலையர்
திகழ்தர நிமிர்த்ததென் சொல்லாய்
கரமொளிர் கதிர்க ளேழ்நிலை மாடங்
கடப்பரி தாகிநிற் பனசை
வரமொளிர் பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

ஈசனே யடிய ரிருவினை நீக்கி
யின்கதி சேர்த்தருள் பரவ
நாசனே மறைக ளுன்கினும் விளைந்து
நல்லருட் பிழம்பென வாழும்
போசனே அடியேன் புரைமலந் தீர்த்தாள்
புகடவா சூழ்ந்திடும் பனசை
வாசனே பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

தந்தையே நால்வர்க் கன்றெழின் ஞானந்
தந்தையே மாலய னரற்கு
முந்தையே வுயிர்க ளனைத்துளு மிருந்து
முந்தையே முனிவர்கள் மனம்வாழ்

சிந்தையே யடியேன் றீவினை யாவுஞ்
சிந்தையே பனசையில் வாழ
வுந்தையே பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

பெரியநாயகி மாலை

அன்றே ரிமைய வரைமக வாகி யமர்ந்தவருட்
குன்றே யடியன் வினைதீர்த் தருளெழிற் கூத்துகந்து
மன்றேய் பரமன் மகிழ்காம வல்லிமெய் மாதவர்சூழ்
நன்றேய் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே.

புத்தூரும் வல்லம் புலியூரு மரசடைப் புண்ணியனூர்
சித்தூரு மாதவர் சேர்ந்தூர் கயிலைச் சிகரம்விட்டுப்
பித்தூ ரடிய னுளத்தூரில் வந்து பிறங்கியதேன்
நத்தூர் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே.


கல்லா மனத்துக் கடையேனை யாண்டு கருணைசெய
வல்லா யென்றுன் பதம்வந் தடைந்தேன் வினைமாற்
[றிடுவாய்
செல்லாங் குழல்மலர்ச் செவ்வாய் வரைகுயச் சிற்றிடைசேர்
நல்லாய் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே.

காட்டு மிரவியும் கண்ணையும் போலக் கலந்துயிரை
யாட்டும் பரம னகத்தா மரையி லழகொழுகத்
தீட்டு முயிரினல் லோவிய மேவினை தீரருளை
நாட்டும் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே.


— தருமையாதீன ஸ்ரீமத் சண்முகத் தம்பிரான் சுவாமிகள்

ஐந்தருவும் வந்துநிறை தென்கடவூர் மேவுபே
ரன்புமிகு கலையனார்தாம்
அளித்தகுங் கிலியப் புகைக்குள மகிழ்ந்துசீர்
அளகையா கரன்றனக்குச்
சந்ததமும் உன்றனைப் போலநிதி யருளெனச்
சாற்றிக் கலைச்சிமானந்
தனக்குமணி முடிகுனிந் தருள்கலய னாரன்பி
னால்நிமிர்ந் திட்டபொருளே
இந்தவித நின்கருணை கண்டுமன முருகிசேய்
யிசைத்திருப் பணிமுதலதா
யேற்றவபி ஷேகநை வேத்தியம தாதியா
யேத்தினர்கள் ஐயமின்றே
சிந்தையில் நினைத்தபடி இந்தவுல கிற்சகல
செல்வமும் பெறுவரன்றோ
தென்பனசை யம்பதி தழைத்திட வளர்ந்தருள்செய்
செஞ்சடை மகாலிங்கமே.

— செஞ்சடைவேதிய தேசிகர்



தட்சிணாமூர்த்தி (சுதை)



பஞ்சமூர்த்திகள் (சுதை)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கும்பாபிஷேக மகத்துவம்

கும்பம் சிவசொரூபம் :- கும்பவஸ்திரம் தோல், மேல் பூசிய செம்மண் இரத்தம், கும்பத்துமண் மாமிசதாது, உதகம் மேஸ் என்ற தாது, கூர்ச்சம் எலும்பு, மேல் சுற்றிய நூல் நரம்பு, கும்பத்திலிடும் பொன்பூ முதலியன வீரியம், நியசிக்கப்பட்ட மந்திரம் உயிர், கீழிட்ட நெல் முதலிய தானியம் ஆசனமாகும். கும்பத்தை முதலில் கோயிலிலுள்ள பிம்பத்தின் சமீபத்தில் வைத்து தருப்பை, மாவிலை முதலியனகொண்டு மந்திரங்களைச் சொல்லிப் பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாஹனம் செய்யவேண்டும். ஆவாஹனமாவது மந்திரங்களைச்சொல்லிக் கும்பத்தில் அபிமுகமாகச்செய்தல். பிறகு அக் கும்பத்தை மங்கள முழக்குடன் யாகசாலைக்கு எழுந்தருளச் செய்யவேண்டும்.

யாகசாலையானது முப்பத்தாறு தத்துவ சொரூபமானதும், சிவபெருமானின் அஷ்ட மூர்த்த வடிவமானதும் ஆகும். யாகசாலையின் ஒன்பது குண்டங்களில், ஒன்பது அக்கினி வளர்க்கப்பெறும், சாதாரணமாக நாடோறும் ஆகவனீயம் தாக்ஷிணாக்கினீ காருகபத்தியம் என்னும் மூன்று

அக்கினியும் வளர்க்கப்பெறும் என்பது "மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" எனவரும் திருமுருகாற்றுப் படை அடிகளான் உணரப்படும். அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்தசந்திரவடிவம் முதலாக ஒன்பது வடிவில் காணப்படும். அவ்வாறு வடிவு அமைப்பதற்குக் காரணங்கள் உண்டு. குண்டங்களைச் சுற்றி முறுக்கிய பசுந் தருப்பைகளைப் பரப்பி, ஆல், அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் இட்டுக் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்னிகொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அதிதெய்வங்களை மனதில் தியானித்து சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக்கொண்டு நெய் முதலியன சொரிந்து அக்கினி வளர்ப்பார்கள். இங்ஙனம் மந்திரம், கிரியை, பாவனை மூன்றினாலும் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும், வேதவொலி, சிவாகம ஒலி, தமிழ்மறை ஒலி இவற்றுடன் உத்தம மெய்யன்பர்கள் நல்லெண்ணங்களும், எங்கும் வியாபித்து இருக்கிற இறைவனது அருட்சக்தியைத் தூண்டி கும்பத்தில் பிரகாசிக்கச்செய்யும். அப்போது அக்கும்பம் தெய்வீக சக்தி நிரம்பியதாகும். மின்சாரத்தைச் செலுத்த செப்புக்கம்பி முதலியனவே தகுதி உடையன ஆதல் போல தருப்பை நுனி மாவிலை முதலியனவும் மந்திரங்களுடன் கூடியவழி சிவசக்தியாகிய மின்சாரத்தைச் செலுத்தக்கூடியன ஆதலின் அவற்றைக் கைக்கொள்ளுகின்றார்கள் என்பதனையும் நுண்ணிதின் உணர்ந்துகொள்ளலாம்.

இவ்வாறு யாகசாலையில் நடைபெறவேண்டிய கிரியைகள் முற்றுப்பெற்றவுடன் மீண்டும் தெய்வீக சக்தி ஆலயத்திலுள்ள பிம்பத்தினிடமாக அமையவேண்டி, அச் சக்தியைச் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின்வழி,

அச் சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்து, கும்பத்தில் உள்ள நீரினால், சிகரங்களிலும் பிம்பத்திலும் அபிடேகம் செய்வார்கள். இதுவே கும்பாபிடேகம். இது பிரதிஷ்டையின் முடிவான கிரியை ஆகும்.

பிரதிஷ்டை

பிரதிஷ்டை என்பது ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்று நான்கு வகைப்படும். ஆலயமே புதியதாகக்கட்டி முதன்முதல் புதிய இலிங்கத்தை ஸ்தாபித்துச் செய்யப்படும் பிரதிஷ்டைக்கு அநாவர்த்தம் என்று பெயர். ஆறு சமுத்ரம் முதலியவைகளால் ஆலயம் சலனமடைந்து மறுமுறை ஆலயம் புதுக்கப்பட்டு பழைய லிங்கத்தை வைத்துச் செய்யப்படும் பிரதிஷ்டை ஆவர்த்தமாகும். ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து மூர்த்திகளுக்கு அஷ்டபந்தனம் சார்த்திச் செய்யப்படும் பிரதிஷ்டை புனராவர்த்தம் எனப்படும். திருடர்களால் தூஷிக்கப்பட்டதற்குச் செய்யப்படும் சாந்தி சம்புரோக்ஷணத்திற்கு அந்தரிதம் எனப்படும்.

பீடம் உமை. இலிங்கம் சிவஸ்வரூபம். இவ்விரண்டையும் சேர்ப்பது பிரதிஷ்டை எனப்படும். ஆதாரசிலையில் பீடத்தையும் பீடத்தில் இலிங்கத்தையும் சேர்ப்பது பிரதிஷ்டை.

சிவசமவேதையான கிரியாசத்தியே ஆதாரரூபையாகும். அதை முதலில் லிங்கபீட நடுவில் கீழ்புரத்தில் கூர்மசிலையில் பூஜிக்கவேண்டும். பின்னும் இந்த சத்தியானது அண்டத்தை மறுபடியும் பேதித்துக்கொண்டு கந்தத்திலிருந்து முளைபோல் கிளம்பியிருக்கும் பிருதிவி தத்துவம்

மூதல் மாயா தத்துவம் வரையில் பத்துமத்தின் அதோபாக மென்னுமிடத்தில், பிரதிவீ தத்துவம் கிழங்கு. அப்பு தத்து வம் நனைப்பு. அக்னி தத்துவம் உட்பச்செய்யும். வாயு தத்து வம் அசைக்கும். ஆகாச தத்துவம் பிரவர்த்திப்பிக்கும். கந்தம் முதல் பஞ்சதன்மாத்திரைகளும் முளைகளாகும். பத்து இந்திரியங்களும் ரந்தரங்களாகும். அஹங்காரம் வளர்க்கும். புத்தி, குணம், பிரகிருதி, புருஷன் என்னும் நான்கு தத்துவங்களும் முறையே தர்ம ஞான வைராக்கிய ஐச்வர்யரூபங்களான சிங்காசனத்தின் நான்கு பாதங் களாகும். ராகம், நியதி, வித்தை, கலை என்னும் நான்கு தத்துவங்களும், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்யம், அனைச்வர்யம் என்ற ரூபங்களான பாதங்களின்மேலிருக் கும் காத்திரங்களாகும். காலதத்துவம் நாளமாகும். நாளமும் இதழும் கூடுமிடும் மாயாதத்துவமாகும். ஆத லால் இதுவரையில் பத்துமத்தின் கீழ்புரமென்று சொல்லி யது, வித்தியாதத்துவ முதல் சிவதத்துவம் வரையில் பத்மத்தினூர்த்துவபாகமென்னுமிடத்து அஷ்ட வித்யேச் வரரும் அஷ்ட தளங்களாகும். அகாரம் முதல் க்ஷகாரம் வரையில் ஐம்பது வர்ணங்களும் ஐம்பது பீஜங்களாகும். அகரம் பிந்துவுடன் கூடிய ககாரம் முதல் ஸகாரம் வரையி லுள்ள முப்பத்திரண்டு அக்ஷரங்களை இருமுறை உச்சரிக் கப்பட்ட அறுபத்துநான்கு அக்ஷரங்கள் கேசரங்கள் ஆகும். கர்ணிகை பீதநிறமாயிருக்கும். கேஸராகரங்களில் கிழக்கு முதலெட்டு திக்குகளிலும் நடுவிலும் நவசத்திகளோடு கூடியிருக்கும் தளாக்ர, கேஸராக்ர, கர்ணிகாக்ர விருத்தங் களில் சூரிய சோமாக்னி மண்டலங்களோடு அவற்றிற்கு அதிபர்களான பிரும்ம விஷ்ணு ருத்திரர்களோடுங்கூடி யிருக்கும் கர்ணிகாமத்தியில் சத்திமண்டலத்தோடும் அதற் கதிபதியான ஈச்வரனோடும் கூடியிருக்கும் என்றறிந்தபடி

பரமசிவனுக்காசனமான பத்மத்தை ஆதாரசத்திக்குமேல் பிருதிவ்யாதி சந்திரமண்டலபர்யந்தம் வியாப்த்தியுள்ள தாகச் சிந்திக்கவேண்டும். இப்படி தியானித்துக் கற்பிக்கு மாசனமே சிவாஸனகற்பனமாகும். சிவனுக்கு ஞானசத்தி யானது அதிஷ்டிக்கும் தேகமாகும். சிவசமவேதையான ஞானசத்தியே அவருக்கு உபசாரமான மூர்த்தி எனப்படும். ஞானசத்திமயமான லிங்கத்தில் கிரியாசத்தி மயமான பீடத்தைச் சேர்ப்பது இலிங்கப் பிரதிஷ்டையாகும்.

பிரதிஷ்டைக்குரிய கிரியைகள் 64 என்று சில ஆகமங் களும், 55 என சில ஆகமங்களும் ஒன்பது கிரியைகளே யும் சேர்த்தும் சுருக்கியும் கூறுகின்றன. அவைகளின் விளக்கம் இங்குத் தரப்படுகிறது.

ஆரம்பத்தில் தனபூஜை செய்துகொண்டு அனுக்ஞை செய்யவேண்டும்.

தனபூஜை :- பொன்னுலமைந்த தட்டினேப் பட்டு பீதாம்பரம் முதலியவற்ருல் அலங்கரித்து சிவதருமத்திற் குரிய பொருளே அதன்மீது வைத்து, யானேமீது அல்லது சிவிகைமீது வைத்துப் பலவகை மங்கள வாத்திய கோஷங் களுடனும் நிருத்தகீதங்களுடனும் இறைவனின் ஆஸ்தான மண்டபத்தையடைந்து மண்டபமத்தியில் ஸ்தண்டிலம் அமைத்து, ஸ்தண்டிலத்தில் எட்டு இதழ் கமலம் வரைந்து அதன்மேல் தட்டினே வைத்து அதிலிருக்கும் திரவியத்தைப் பதினெருபங்காகப் பிரித்துவைக்கவேண்டும். அங்கு சுத்தி யின் பொருட்டு விக்னேச்வரபூஜையுடன் புண்யாகவாசனம் செய்து புரோக்ஷித்துப் பதினென்ருகப் பிரித்த பொருட் குவியலில பஞ்சப்பிருமம் ஷடங்கமந்திரங்களேயும்

அஷ்டலக்ஷ்மிகளையும் சாங்கோபாங்கமாகப் பூஜை செய்து செலவு செய்யவேண்டும்.

சிவார்ப்பணம் செய்யப்பட்ட பொருளைப் பதினொரு பாகமாகச்செய்து யாகத்தின் பொருட்டு மூன்று பாகங் களும், அபிஷேகத்தின் பொருட்டு ஒரு பாகமும், ஆசாரிய தக்ஷிணையின் பொருட்டு இரண்டு பாகமும், அவ்வாறே ருத்விக் தக்ஷிணையின் பொருட்டு இரண்டு பாகமும், வேத பாராயணம், ப்ராம்மண போஜனம் முதலியவற்றிற்கு இரண்டு பாகமும், மற்றொருபாகம், மண்டலாபிஷேகத்தின் பொருட்டும் பிரித்துச் செலவு செய்யவேண்டும்.

அனுக்ஞை :- இது பிராம்மணானுக்ஞை, தேவா னுக்ஞை என இருவகைப்படும். கும்பாபிஷேகத்தைச் செய்ய ஆசாரியராக இருந்து நடத்தத் தகுதி உள்ளவன் என்று சபையோர்களிடம் அனுமதிபெற்றுப் பின் இறைவ னிடமும் இறைவியிடமும் அனுமதிபெறல்.

விக்னேச்வரபூஜை :- செய்யப்படும் காரியத்தை இடையூறில்லாமல முடிக்கவேண்டியதன்பொருட்டு விக்ன கர்த்தாவான விநாயகரை வணங்கிப் பிரார்த்தித்து அனுமதிபெறல்.

வாஸ்துசாந்தி :- இறவாவரம் வாங்கியவரான வாஸ்துபுருஷன் என்ற அசுரனின் உபாதி இல்லாமலிருக்க, அவ்வசுரனைக் காவல்புரியும் பிரமன் முதலியவர்களான ஐம்பத்துமூன்று தேவர்களையும் பூஜை, பலி முதலியவை களால் திருப்திசெய்து இடையூற்றை நீக்குதல்.

மிருத்ஸங்கிரஹணம் :- மண்ணிற்கு அதிபதியான பூமியையும், காவலர்களான இந்திரன் முதலிய திகபாலகர் களையும், தலைவரான பிரமனையும் பிரார்த்தித்துக்கொண்டு அவர்களின் அனுமதி பெற்று அங்குரார்ப்பணம் என்னும் கிரியை செய்வதற்கு வேண்டியதான மண்ணை, வெட்டி எடுத்து வெட்டியவெட்டு நீங்க ஏழு கடலையும் வரவழைத் துப் பூமிக்கு அபிடேகம் செய்து வேண்டல்.

அங்குரார்ப்பணம் :- செய்யப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் சுபாசுபங்களை அறிவதற்குரிய கிரியை அங்கு ரார்ப்பணம் என்பது. மந்திரபூர்வகமாக பாலிகைகளில் தெளிக்கப்பட்ட வித்துக்கள் சரியாகவும், பசுமையாகவும் முளைத்தால் கிரியை சரியானமுறையில் அமைந்தது என்று உணர்ந்துகொள்ளவேண்டும். அது மாறுதலாக இருந் தால் குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்யவேண்டும். அங்குரம் இல்லாத கிரியை பயனற்றது.

ரக்ஷாபந்தனம் ;- இது ஆசாரியருக்குச் செய்யப்படும் ரக்ஷை. இது, கிரியை பூர்த்தியாவதற்குள் தெய்வீகமாய் ஆசௌசாதிகள் நேர்ந்தால் அதனால் அக் கிரியைக்குப் பாதகம் ஏற்படாதவகையில் ஆசாரியனைக்காக்கும். அதா வது ரக்ஷாபந்தனவிஸர்ஜனம் செய்யும் வரையில் ஆசாரிய ருக்கு ஆசௌசம் முதலிய தோஷம் அணுகாது.


பூஜையாவது :- சூரிய பூஜை முதலாக யாகமண்ட பாராதனம் செய்து ஆசாரியன் பஞ்சசுத்தியின் முறையாக இறைவனைக் கும்பத்தில் ஆவாகனம் முதலியன செய்து பூஜிக்கவேண்டும். பஞ்ச சுத்தி என்பது ஆன்ம, ஸ்தான, திரவிய, மந்திர, லிங்க சுத்திகளாகும்.

பஞ்ச சுத்தி :- முதலாவது பூத சுத்தி. இது, தேஹ சுத்தி, ஜீவ சுத்தி என இருவிதமாகும். தேஹ சுத்தியும் ஸ்தூலதேஹசுத்தி என்றும் சூக்ஷ்மதேஹசுத்தி என்றும் இரண்டு வகைப்படும்.

பூஜகருடைய தேஹத்தைச் சிவதேஹமாக ஆக்குதல் தேஹசுத்தி. பூஜகருடைய ஜீவனை சிவமாக ஆககுதல் ஜீவசுத்தி எனப்படும்.

இந்த ஆன்ம சுத்தி, கரந்யாஸ அங்கந்யாஸரூபமான ஸகளீகரணத்துள்ளடக்கம். அதாவது கரந்யாஸம் செய்து கொண்டு ப்ராணாயாமத்தின் அனுபவத்தினால் தேகசுத்தி ஜீவசுத்தியைச் செய்துகொண்டு முடிவில் அங்கந்யாஸம் செய்து முடிக்கவேண்டும்.

தனது சரீரத்திலிருக்கும் இடை பிங்கலை சுழுமனை என்ற நாடிகளை உணர்ந்து சுழுமனா நாடியின் நடுவில் ஹ்ருத்யகமலத்தில் வீற்றிருக்கும் சைதன்யத்தை ஜ்வலிக்கின்ற ஹூங்காரமெனும் ஓடத்தில் வைத்து ரேசகமார்க்கமாக த்வாதசாந்தத்திலிருக்கும் சிவனோடு சேர்த்துவிட்டு பிரதிவி முதலான பூதங்களைக் கந்தமுதலான தன்மாத்திரைகளில் அடக்கி எல்லாவற்றையும் பிந்துவில் அடக்கிவைத்துவிட்டு ஸ்தூலதேகத்தைச் சுத்திசெய்யவேண்டும். ப்ரதிலோம முறையாக தன் தனது காரணங்களை பிந்துவரை அடக்கிவைத்தல் சூக்ஷ்மதேகசுத்தியாகும், பிருதிவிமுதல் ஆகாயமீறாகிய பஞ்சபூதங்களையும் அவ்வப் பூதங்களின் நிறம், குறி தெய்வம், வடிவங்களோடுதியானித்து அவ்வப் பூதங்களுக்குரிய கலாமந்திரங்களை அவ்வக்கலாபீஜங்களோடு முறைப்படிசேர உச்சரித்து அப்பூதங்களை விதிப்படி



திரிபுரசம்ஹாரர் (சிற்பம்)

சுத்தி செய்வது ஸ்தூலதேகசுத்தி. பிறகு வலது கால் கட்டைவிரலிலிருந்து எழுந்த அக்னியால் சரீரத்திலுள்ள பூததோஷங்களைக் கொளுத்தி தஹனம் செய்துவிட்டு மறுபடி ஹ்ருதயகமலத்தில் த்வாதசாந்தத்திலிருந்தும் பீஜ ரூபமாயும் சிவவடிவாயுமுள்ள ஆன்மாவை இறக்கிவைத்து வௌஷடந்தமான சத்தி மந்திரத்தினல் கலக்கப்பட்ட ப்ரம்மரந்திரத்திலிருக்கும் அமிருதவாவியினின்றும் அமிருத ப்ரவாகத்தை எல்லா நாடிகளின் வழியாகவும் தனது பாஹ்யம் ஆப்யந்தரம் எல்லாப்பகுதிகளையும் ஆப்லாவனம் செய்வதே ஸ்தூலதேக சூக்ஷ்மதேக சுத்தியுடன் ஜீவசுத்தியு மாம்.

அஸ்திர மந்திரங்களினல் தானத்ரயஞ்செய்து அங்கு நிற்கும் இடையூறு அகற்றி, அஸ்திரமந்திரத்தினல் அக்னி வர்ணமாகிய மதிலையும் கவசமந்திரத்தினல் அகழையுஞ் செய்து சத்தி மந்திரத்தால் மேலுங்கீழும் சத்திகளினிறை வாகப் பாவித்துச் சிவலிங்கத்துக்கு முன் மண்டலமிட்டு பூமிதேவியைத் தியானிப்பது ஸ்தானசுத்தியாகும்.

திரவியசுத்தி என்பது அர்க்கியம் வைத்து அதனல் எல்லாத் திரவியங்களையும் புரோக்ஷித்தல் ஆகும்.

மந்திரசுத்தி :- தந்தம், தாலு, ஓஷ்டம் என்ற இடங் களில் மந்திரங்கள் பட்டுவருதலால், அங்குள்ள மாயிகை என்ற அசுசிபட்டு அதனல் அந்த அந்த மந்திரங்கள் அதற் குரிய ஈச்வரனல் கொடுக்கப்பட்ட சத்திக் குறைவு ஏற் பட்டு அந்தந்த மந்திரங்களாலுண்டாகும் பலன் குன்றும லிருக்கவே செய்யப்படும் சுத்தி மந்திரசுத்தி. ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம் என்ற மூன்றுவிதமாக ஓம்காரம்

முதலாக நமோந்தமாக ஸம்ஹிதா மந்திரத்தை ப்ராஸாத மந்திரத்துடன் கூடிய மூலமந்திரத்தை உச்சரித்தல். இதில் ஹ்ரஸ்வமாக பிரம்மந்திரத்தையும் தீர்க்கமாக அங்கமந்திரத்தையும் ப்லுதமாக ப்ராசாத மூலமந்திரத்தையும் மும்முறை கூறவேண்டும். (ஹ்ரஸ்வம் என்பது பிந்துவரையில உச்சாரணம். தீர்க்கம் பிரும்மரந்த்ரம் வரையில் உச்சாரணம். ப்லுதம் த்வாதசாந்தம்வரையில் உச்சாரணம்.)

வலது உள்ளங்கையில் சந்தனத்திஞல் இடது பெரு விரலால் சந்தனம் பூசி அதில் முக்கோணம்வரைந்து அதின் நடுவில் ப்ரணவம் எழுதி இடது கையால் நீரிக்ஷண முதலிய ஸம்ஸ்காரம் செய்து ஜ்யோதிர் வடிவமான அர்க்கியம் கொடுத்து அஞ்சலி கூப்பி தன்னை சிவஸ்வரூபமாக நினைத்து தனது உடலில் அந்த சந்தனத்தைப் பூசிக்கொள்ள வேண்டும். இது சிவஹஸ்தபாவனை. இதனுல் இந்த ஹஸ்தம் சிவபூஜார்ஹமாக ஆகிறது. தானும் சிவஸ்வரூபனுக ஆகிருன். "शिवोभूत्वा शिवं यजेत्" என்றபடி சிவ பூஜைக்குத் தகுதி உள்ளவனுகிருன்.

லிங்கசுத்தி என்பது ஆன்மார்த்தத்தில் பார்த்திவ லிங்கம் பூஜை செய்யுமிடத்தில் தனியாகச் செய்யப்படும். பரார்த்தத்தில மூலலிங்க அபிஷேகத்துடன் சேர்ந்துவிடும்.

கும்பஸ்தாபனம்: இறைவனை ஆவாஹனம் செய்யும் பொருட்டு குடத்தை மந்திரபூர்வமாக அலங்கரித்து வித்யாதேஹமாகப்பாவித்தல். குடத்திற்குச் சாத்தப்பட்ட வஸ்திரம் தோலாகவும், மேல்பூசப்பட்ட மண் ரக்தமாகவும், செய்பொருள் மாம்சமாயும், ஜலம் மேதோ தாதுவாயும்,

கூர்ச்சம் எலும்பாயும், சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும், குடத்தில் போடப்பட்ட ரத்னம், சுவர்ணம் இவை சுக்லதாதுவாகவும், நியாசம்செய்யப்பட்ட மந்திரம் ஜீவனாக வும், போடப்பட்ட தானியம் ஆசனமாகவும் ஆகிறது.

கலாகர்ஷணம் :- அலங்காரம் செய்யப்பட்டு வித்யா தேஹமாகப் பாவிக்கப்பட்ட குடத்தில் குரூபதேச முறைப் படி மூலஸ்தானத்தினின்றும் சுவாமியை ஆகர்ஷணம் செய்து குறிப்பிட்ட காலம் வரையில் கடத்தில் இருக்கச் செய்தல்.

யாகசாலை :- சுவாமியைக் குடத்தில் முறைப்படி ஆகர்ஷணம் செய்து அந்தக்குடத்தை சகலவித உபசாரத் துடன் ப்ராகாரத்தை வலமாக எடுத்துவந்து முன்பே அமைக்கப்பட்ட யாகசாலையில் பிரதிஷ்டை செய்து, இரண்டு காலம் முதல் சக்திக்குத் தக்கவாறு, பூஜை, ஹோமம் முதலியவைகளைச் செய்துவரும் இடம்.

யாகசாலா என்ற வடமொழிச்சொல்லில் உள்ள யகரம் யக்ஞத்தையும், ககரம் செல்லுதலையும், சகரம் சுகத்தையும், லகரம் லயத்தையும் குறிப்பதால், யாகசாலை என்ற சொல்லுக்கு ஞான யாகத்தால் லயத்தானத்தில் சுகததின்பொருட்டுச் செல்வது என்று பொருளாகும். எனவே ஞான யாகம் செய்வதற்குரிய ஸ்தானம் யாக சாலையாகும்.

யாகசாலையின் முறை ;- ஆலயத்தினுடைய வட மேற்குமூலை தவிர மற்றைத் திக்குகளில் ஏதாவதொரு இடத்தில் அமைக்கவேண்டும். யாகசாலை மூன்று பக்ஷ மாக இருக்கிறது. அதாவது ஒன்பது குண்டவிதானம்,

ஐந்து குண்டவிதானம், ஏக (ஒரு) குண்டவிதானம் என்று தேச கால கிரியை முதலியவைகளை அனுசரித்து 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 20, 32 என்ற முழங்களால் யாக சாலை அமைக்கலாம்.

யாகசாலையின் உட்கூட்டை 81 பதமாகச் செய்தால் மத்தியில் உள்ள ஒன்பது பதம் பிரும்மம் என்றும் சுற்றிலுமுள்ள பதினாறு பதம் தைவிக பதம் என்றும் இருபத்தி நான்கு பதம் மானுஷ பதம் என்றும் 32 பதம் பைசாச பதம் என்றும் பெயர். பிர்ம்மபதத்தில் சிவகும்பத்துடன் வித்யேச்வரர்களையும் வைக்கவேண்டும். தைவிகபதத்தில் அஷ்ட மங்கலங்களையும், மானுஷபதத்தில் குண்டத்தையும், பைசாசபதத்தில் தோரணத்தையும் வைக்கவேண்டும். இது தசசூத்ர யாகசாலையின் விதியாகும். இதுபோல் மற்ற மனு சூத்ரயாகசாலை, கலாசூத்ரயாகசாலை முதலிய யாக சாலையின் விதிகளும் ஆகமங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

யாகசாலைக்கு நான்குபுறமும் நான்கு வாசற்படி வைத்து மேலே மூன்று த்ரிசூலம் வைக்கவேண்டும். அஷ்ட மங்கலம், தசாயுதம், கொடி, பதாகம், தர்ப்பமாலை முதலியவைகளால் அலங்கரிக்கவேண்டும். கிழக்குமுதல் முறையே நாற்கோணகுண்டம், யோனிகுண்டம் அர்த்த சந்திரம், முக்கோணம், விருத்தம், அறுகோணம், பத்மம், எண்கோணம் என்ற குண்டங்களை அமைக்கவேண்டும். எண்கோண குண்டத்திற்கும் நாற்கோண குண்டதிற்கும் நடுவில் பிரதான குண்டம் போடவேண்டும். இது விருத்த மாகவாவது சதுரமாகவாவது இருக்கலாம். இக் குண்டங்களுக்குப் பெயர் முறையே, ஆஹவனீயம், விருத்தாக்னி,

தக்ஷிணுக்னி, யௌவனுக்னி, கார்ஹபத்யாக்னி, பாலாக்னி, கேவலாக்னி, சாமான்யாக்னி, சிவாக்னி, என்பனவாம். இதனுள் சிவாக்னி பிரதானமாகும்.

யாகாக்கினி. ஆல், அரசு, புரசு முதலிய சமித்து கொண்டு வளர்க்கப்படுவது. நெய், பால், பழம் முதலியனவும் சொரிவார்கள். தைலம் வடிப்பவர்கள் ஒருவகை விறகு கொண்டே காய்ச்சி வடிக்கின்றுர்கள். வேறுவகை விறகாலுல் தைலம் குணம் கெட்டுவிடும் என்பது அவர்கள் துணிபு. சூடு ஒன்றுபோல் நமக்குக் காணப்பட்டாலும், விறகுக்குத தக்க குணம் தருகிறது என்பது தெளிவு. துரியோதனன் ஏவலால் காளமாமுனி ஆபிசார ஓமம் வளர்ப்பதற்கு விஷமூலிகைகளேச் சமித்தாகக்கொண்டார் என்பதும், அதற்குத்தக அக்னியிலிருந்து பூதம் தோன்றியது என்பதும், பாரதத்தில் கூறப்பெற்றுள்ளன.

யாகசாலே ருத்ரசூத்திரம், விஷ்ணுசூத்திரம், பிரமசூத்திரம், கணசூத்திரம், கலாசூத்திரம், மனுசூத்திரம், ரவிசூத்திரம் பங்க்தி சூத்திரம் என்ற எட்டுவித பேதத்தையுடையதாகும். பங்க்தி சூத்திரத்துக்குத் தசசூத்திரமெனவும் பெயர்.

யாகசாலேயில் கிழக்கில் நாற்கோண குண்டமும், அக்னிதிக்கில் அரசிலே குண்டமும், (யோனி குண்டமும்) தெற்கில் அர்த்த சந்திர குண்டமும், நிருதியில் திரிகோண (முக்கோண) குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும், வாயு திக்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்ம குண்டமும், ஈசானத்தில் எண்கோண குண்டமும், ஈசான திக்கிற்கும், கிழக்குத் திக்கிற்கும் மத்தியில் பிரதான குண்டமும் போடப்பெறும்.

நாற்கோண குண்டம் பிருதிவி தத்துவமாகும். அரசிலைக் குண்டம் நியதி மாயாதத்துவமாகும். அது சிவனைக் குறிக்கும். அர்த்த சந்திர குண்டம், அப்பு தத்துவமாகும். முக்கோண குண்டம், தேயு தத்துவமாகும். அறுகோண குண்டம், வாயு தத்துவமாகும். விருத்த குண்டம், ஆகாய தத்துவமாகும். பத்ம குண்டம், கலா தத்துவமாகும்; இது சூரியனைக் குறிக்கும். எண்கோண குண்டம் காலதத்துவமாகும், இது சந்திரனைக் குறிக்கும். விருத்த குண்டமாகிய பிரதானகுண்டம், சிவதத்துவமாகும்; இது சிவபிரானைக் குறிக்கும். ஆதலால் யாக சாலையானது 36 தத்துவ சொரூபமானதும் சிவபிரானது அஷ்டமூர்த்த வடிவமானதுமாகும்.

இங்ஙனம் கூறிய நாற்கோணமாகிய குண்டங்களில் முறையே அஷ்ட மூர்த்திகளாகிய க்ஷமா, வன்னி, யஜமானன், அர்க்கன், ஜசாகம், வாயு, நிசலரன், வியோம எட்டு மூர்த்திகளும் பவன், மகாதேவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்திரர், உக்கிரர், பீமர் எனுமிவர்களும் முறையே இவர்களுக்கு மூர்த்திமான்களான தத்புருஷ மூர்த்தி, இருதயமூர்த்தி, அகோரமூர்த்தி சிகாமூர்த்தி, சத்யோஜாதமூர்த்தி கவசமூர்த்தி, வாமதேவமூர்த்தி, சிரசு மூர்த்தி பரசிவமூர்த்தி எனும் இவர்களும் பூசிக்கப் பெறுவார்கள்.

இனி குண்டங்களில் பூசிக்கப்பெறும் அக்னிவகையாவது:- அக்கினியானது, வைசுவானராக்கினி, சிவாக்கினி என இருவகைப்படும். வைசுவானராக்கினி, தேவதாத்மக பாவமில்லாது, ஜாடராக்னி ரூபமுடையதாகும். தேவதாத்மக பாவமுடையதாய் சிவரூபமாய் இருக்கும் யாகம்,

கர்மயாகம், ஞானயாகம் என இருதிறப்படுவதால் கர்ம யாகத்தில், வைசுவானராக்கினியும் ஞானயாகத்தில் சிவாக்கினியும் பூசிக்கப்பெறும். நாமகரணம்வரை நமஸ் கரிக்கப்பெறுவது பாலாக்னியும் விவாகம்வரை நமஸ் கரிக்கப்பெறுவது விருத்தாக்கினியும் ஆகும். சிவாக்கினி அங்கியும் ஏனையவை அங்கமுமாகும். யாகசாலையில் போடப்பெறும் குண்டங்களும், தனித்தனியே ஒவ்வொன் றும் சிவசொரூபமாகும். அவையாவன :

•

குண்டங்கள் சிரசு, இருதயம், நாபி, கண்டம், யோனி, மேல்மேகலை, நடுமேகலை, கீழ்மேகலை, பரிஸ்தரணம் எனும் ஒன்பது உறுப்புக்களை உடையன. இவற்றுள் பரிஸ்தர ணம் நீங்கலாக எட்டுறுப்பும், அஷ்ட மூர்த்தி சொரூபங் களாகும். குண்டத்தின் சிரசு அக்னியாகும். நடுவிலுள்ள கர்ணிகையோடு கூடிய பத்மம் இதயமாகும். அந்தப் பத்மத்துக்கு வெளியே வட்டவடிவமாய் மூன்றங்குல உயரத்தில் செய்யப்படுவது நாபியாகும். குண்டத்தின் உயரத்தில் நடுப்பாதியில் ஓரங்குலத்தில் கர்ணம் கங்கணம் போல் செய்யப்பட்டது கண்டமாகும். கண்டத்தின்கீழ் இரண்டங்குல நுனியும், கண்டத்தின்மேல் மேல்மேகலை பரியந்தம் நீண்டு மேல்மேகலையின் அரசிலையின் அடிபோல் நாலங்குல அகலமும், இரண்டு அல்லது ஓரங்குல உயரமும் உடையதாகச் செய்யப்பெறுவது யோனியாகும். இது கண்ட பரியந்தம் நீண்டு பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ள தாகவும் செய்யப் பெறலாம். குண்ட வடிவில் மேலும் அதன்கீழும், அதன்கீழுமாக முறையே 4. 3, 2 அங்குல உயரமும் அகலமுமாய்ச் செய்யப்பெறுவன மேகலைகளா கும். யோனி குண்டத்திற்கு யோனியும், பத்ம குண்டத் திற்கு இருதய கமலமும் இரா.

பரிஸ்தரணமாவது குண்டத்தைச் சுற்றிப் போடப் பெறும் தர்ப்பைகளாகும். இவை பசுமையான 30 தருப்பை களினாலே சடைபோல் பின்னப்பட்டதாய் அல்லது முறுக்கப் பட்டதாய் ஓரங்குல அளவில் வலமாகப் போடப் பெற்ற முடியை உடையதாக இருக்கவேண்டும். பரிஸ்த ரணம் விஷ்டரம் என்று சொல்லப்பெறும்.

இனி குண்டத்தில் சாங்க உபாங்க பிரத்தியங்கங் களாவன :- அக்னி சாங்கமும், மேகலைகள் உபாங்கமும், பரிஸ்தரணம் பிரத்யங்கமும் ஆகும். இனி குண்டத்தில் பஞ்சாவரணங்களாவன ;

முதலாவரணம் அக்னி, இரண்டாமாவரணம் மேல் மேகலை, மூன்றுமாவரணம் நடுமேகலை, நான்காமாவரணம் கீழ்மேகலை, ஐந்தாமாவரணம் பரிஸ்தரணமாகும். இவ் வாறு குண்டங்கள் சிவ சொரூபமும் சிவாலய சொரூபமு மாய் இருத்தல் அறிக.

இனி யாகத்தில் உபயோகப்படுத்தப்பெறும் ஹோம சாதனமான சுருக்கு, சுருவம் என்னும் கருவிகளில் சுருக்கு என்பது கலசம், கண்டிகை, வேதிகை, கண்டம், முகம், பிலம், மேகலை, ஆச்யசரணி தண்டம் என்னும் உறுப்புக் களை உடையதாகும். சுருவமாவது விருத்தம் நெய்த்தாரை கண்டிகை புஷ்கரங்களோடு கூடியதாகும்.

இந்த குண்டங்களுக்கு சரீரமாக இறைவனின் எட்டு சரீரம் விளங்குகிறது. அதாவது கிழக்குமுதல் வடகிழக்கு வரையில் வரிசையாக பிருதிவி, அக்னி, யஜமான், சூர்யன், ஜலம், வாயு, சந்திரன், ஆகாயம் என்ற எட்டும் விளங்கு கிறது.



ஊர்த்துவதாண்டவர் (சிற்பம்)

சர்வன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பவன், மஹேச்வரன், மஹாதேவன், பீமன் என்ற எண்மரும் அந்த சரீரங்களுக்கு அதிபதியாக விளங்குகிறார்கள். எட்டு குண்டங்களில் எட்டு சரீரங்களைத் தனித்தனி தியானித்துப் பூஜை ஹோமங்களால் பிரசன்னமுள்ளதாகச்செய்து கடத்திலிருக்கும் இறைவனோடு சேர்த்துப் பின் கடத்திலிருக்கும் இறைவனை மூலபிம்பத்தில் சேர்த்தால் இறைவனைக் குறித்து கும்பத்திலும் குண்டத்திலும் செய்யப்பட்ட பூஜை ஹோமங்களும் சேர்ந்து இறைவனுடைய அருட்சக்தியை வலுவுள்ளதாகச் செய்து இறைவனை மிகவும் பிரசன்னமுள்ளவராகச் செய்கிறது.

•

அஷ்டபந்தனம்:- இது பீடத்தையும் பிம்பத்தையும் சேர்க்கும் ஒரு தெய்வீக மருந்து. சுக்கான், குங்கிலியம் கொம்பரக்கு, காவி, செம்பஞ்சு, லிங்கம், வெள்ளைமெழுகு வெண்ணை இந்த 8 மருந்துகளை அததற்குரிய அளவு கொண்டு சேர்த்து இடித்துச் சாத்தவேண்டும். பீடம் என்பது ஒரு சக்தி. இம்மருந்து பீட சக்தியையும் இறைவனின் திருவருள் சக்தியையும் தொடர்புடையதாய் ஒன்றுபடுத்தி தரிசிப்பவர்களுக்கு அனுக்ரஹ சக்தியை அளிக்க வல்லதாக இருக்கிறது.

ஆலயத்தில் உள்ள பிம்பங்கள் அசைந்தாலும் கீழ் நோக்கினாலும் மேல் நோக்கினாலும் மக்கட்கும் அரசாங்கத்துக்கும் நன்று அன்று. ஆதலின் அப்பிம்பங்கள் அசையாமல் நேரே பார்த்திருக்கும்படி கொம்பரக்கு முதலிய எட்டுப் பொருள் கொண்டு இடித்த மருந்தைப் பீடத்தைச் சுற்றிப் பதியவைத்தல் அஷ்டபந்தனம் ஆகும்.

சொர்ணபந்தனம் ;- முன் கூறியபடி நேரே இருப்பதற்காகத் தங்கச் சுருள் கொண்டு பதியவைத்து கெட்டிப்படுத்துவதாம்.

பிம்பசுத்தி ரஷாபந்தனம் ;- கலாகர்ஷணம் செய்தபின் பிம்பத்திற்கு ஏற்பட்ட சிற்பிதோஷ நிவர்த்தியின்பொருட்டுச் செய்யப்படும் சம்ஸ்காரம். ஐந்துவிதமான பட்டை, தளிர், எட்டுவிதமான மண் இவைகளைக்கொண்டு ஸ்நபனம் வைத்து ஜபம் செய்து அபிஷேகம் செய்து ரக்ஷை கட்டுதல்.

ஸ்பர்சாஹுதி :- யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும், தத்வங்களையும், தத்துவத்தின் அதிபர்களையும், மூர்த்தி மூர்த்தீச்வரர்களையும், மூர்த்தீச்வரிகளையும் நாடீசந்தானம் (தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி அல்லது தர்ப்பைக்கயிறு) என்ற முறைமையால் இறைவனிடத்தில் சேர்த்து இறைவனை ஒளிப் பிழம்பாகச் செய்தல்.

கும்பாபிஷேகம் ;- யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கடத்தை எழுந்தருளச்செய்து மூலாலயத்தில் பிம்பத்தின் முன்வைத்து குருபதேச முறைமையால் திரும்ப கும்பத்தினின்றும் பிம்பத்தில் சேர்த்து பிரதிஷ்டித்து அக்குட நீரை அபிஷேகம் செய்தல். இதனுல் எல்லாவகையாலும் நாடு செழிக்கும். கும்பாபிஷேகத்தைச் செய்பவர்களும் தரிசிப்பவர்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவார்கள்.

மஹாபிஷேகம் :- இதற்கு மஹாஹவிர் நிவேதனம் என்றும் சொல்லுவதுண்டு. கும்பாபிஷேகம் செய்தவுடன் இறைவனுக்குப் பூர்ணமான அபிஷேக திரவியங்கொண்டு

அபிஷேகம் செய்வித்து அதேபோல் பூர்ணமாக நிவேதனம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதால், இதுகாறும் கும்பாபிஷேகத்தின் வேலையில் களைப்படைந்த பிரமன் முதலிய சகல பசுவர்க்கங்களும் திருப்தியடைகின்றன.

மண்டலாபிஷேகம் :- இதற்கு த்ரைபக்ஷிகம் என்று பெயர். மூன்று பக்ஷம் இறைவனை விசேஷமாகப் பூஜித்து முடிவில் ரக்ஷாவிசர்ஜனத்துடன் பூர்த்திசெய்யவேண்டும்.

கும்பாபிஷேக மகத்துவம் :– கும்பாபிஷேகம் பெருவிழா அல்லது பெருஞ்சாந்தி எனப்படும். "கபாலீச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" எனவரும் ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கானுமுணர்க. கும்பாபிஷேகம் என்பது கும்பத்திலுள்ள நீரினால் அபிடேகித்தலாம்.

உ
சிவமயம்

பெரியநாயகியம்மை துதி


செய்வகை யறிவோ டிச்சைநற் றிரோதம்
திகழ்பரை யாகியெஞ் ஞான்றும்
ஐவரைச் சேர்பித் தைந்தொழில் நடாத்தி
யாருயிர்க் குறுதிசெய் பவளை
மெய்வழா துணர்த்தி பொய்வழா தகற்றி
விரிந்தபூ ரணத்தைமெய் யென்பர்
நைவுறு தளிக்கும் பனசைவாழ் பெரிய
நாயகி தனைப்பணிந் திடுவாம்.

தல புராணம்

தார்பூத்த செழுங்கொன்றை அமுதம்நனி
ஏடுமதி தரித்து நீண்ட
ஏர்பூத்த செஞ்சடைவே தியரையுயர்
பனசைமகிழ்ந் திருந்துளாரை
வார்பூத்த பொம்மென்முலை வரையவளை
வளையவளை மாயன்யேத்தச்
சீர்பூத்த புகழிமவான் நீர்வார்க்கப்
பெற்றவர்தாள் சிரமேற்கொள்வாம்.



கஜசம்ஹாரர் (சிற்பம்)




திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி
தேவஸ்தானம் மகாகும்பாபிஷேகம்

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளியாதல்

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



கடம் எழுந்தருளியாகி வலமாக வருதல்

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும்
அன்பர்களும்

உ

சிவமயம்

தருமையாதீனத் திருக்கோயில்கள்

1. *புள்ளிருக்குவேளூர் ;— சடாயுவும், இருக்கு வேதமும், முருகனும் பூசித்தமையினால் திருப்புள்ளிருக்கு வேளூர் எனவும் வினை தீர்த்தான்கோயில் எனவும் வழங்குவது இத்தலம். இது அங்காரக க்ஷேத்திரம். முருகப்பெருமான் செல்வமுத்துக்குமாரனாக எழுந்தருளிக் கலியுக வரதனாய் விளங்கிவரும் சிறப்புடையது. சிறந்த பிரார்த்தனைஸ்தலம். கார்த்திகைத்திருநாட்களில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து முத்துக்குமாரனை வழிபட்டு சந்தனாபிஷேக தரிசனம் செய்து இன்புற்றுவருகின்றனர் பேய் பிசாசு பில்லி சூனியம் முதலியன இத்தலத்திற்கு வந்து தரிசித்தால் அகல்வது கண்கூடு. பிறவிப்பிணி மருத்துவராகிய வைத்தியநாதப் பெருமான் தையல்நாயகி தைலபாத்திரமும் அமிர்தசஞ்சீவி யும் வில்வத்தடிமண்ணும் எடுத்துக்கொண்டு உடன்வர 4448 நோய்களைத் தீர்க்கின்ற தலம். இங்கு சித்தா மிர்த தீர்த்தம் சிறப்புடையது. தல விருக்ஷம் வேம்பு. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோருடைய தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றது. குமரகுருபரர், ஸ்ரீ சிவஞான தேசிகர், படிக்காசுப் புலவர் முதலியோர் இத்தலத்தில் எழுந்தருளிய முத்துக்குமாரனையும் வைத்திய

நாதப்பெருமானையும் போற்றிப் பாடியுள்ளனர். இறைவன் பெயர் வைத்தியநாதப்பெருமான். இறைவி பெயர் தையல்நாயகி. இத்தலம் மாயூரமிருந்து சிதம்பரம் செல்லும் இரயில் மார்க்கத்தில் ஒரு புகைவண்டி நிலையமாக விளங்குகிறது.

2. சீகாழி :— பிரமபுரம் வேணுபுரம் முதலிய பன்னிரு திருப்பெயர்களை உடையது. பேரூழிக்காலத்தில் தோணியாக மிதந்த காரணத்தால் தோணிபுரம் என்று போற்றப்பெறுவது. திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரம் செய்தருளி இறைவன் அளித்த சிவஞானத்தை இன்னமுதத்துடன் கூட்டியுண்ட சிறப்பிற்குரியது. தோணியப்பர் குருவடிவாகவும், பிரமபுரீசர் இலிங்கவடிவாகவும், சட்டைநாதர் சங்கம வடிவமாகவும் விளங்குகின்றனர். திருத்தோணிமலைச் சிகரத்தில் எழுந்தருளியுள்ள சட்டைநாதப் பெருமான் பெருஞ் சிறப்போடு போற்றப்பட்டு வருகின்றார். வெள்ளிக்கிழமைதோறும் அர்த்தயாமத்தில் சட்டைநாதருக்குச் சிறப்புவழிபாடு நடைபெறுகிறது. பிரமதீர்த்தம் இத்தலத்திற்குரிய சிறந்த தீர்த்தமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர் நால்வராலும் பாடப்பெற்ற சிறப்பினை உடையது. இறைவன் பெயர் பிரமபுரீசுவரர். இறைவி பெயர் திருநிலைநாயகி. இத்தலம் மாயூரமிருந்து சிதம்பரம் செல்லும் இரயில் மார்க்கத்தில் ஒரு புகைவண்டி நிலையமாக விளங்குகிறது.

3 திருக்கடவூர் :— வில்வவனம் பிஞ்சிலவனம் முதலிய பல பெயர்களை உடையது அமுதங் கடைந்த தேவர்கள் அமுதகலசத்தை வைத்துவிட்டு நீராடச் சென்ற

போது அக்குடமே சிவலிங்கத் திருவுருவமாயிற்று என்பது தல வரலாறு. இறைவன் அமுதகடேசர். அட்ட வீரட்டத் தலங்களில் இதுவும் ஒன்று. மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்த திருத்தலம். அம்பிகை அபிராமி என்ற திருப்பெயரோடு விளங்குகிறார் கால சம்காரமூர்த்தி சந்நிதி சிறப்புடையது. இங்கு அறுபதாண்டு விழா, சதாபிஷேகம், மிருத்யுஞ்சய ஹோமம் செய்து கொள்வோர் பலர். மாயூரம் தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் உள்ளது. இரயில் நிலையமும் உள்ளது

4. **திருபுவனம் ;—** கும்பகோணத்திற்கு அருகில் உள்ள இத்தலத்திருக்கோயில் மூன்றும் குலோத்துங்கனால் கட்டப்பெற்றது. சிறந்தசிற்பங்களை உடையது இங்குள்ள இராமாயண வரலாற்றுச் சிற்பத் தொடர் காண்டற்கு அரியது. இத்தலத்தின் சிறந்த மூர்த்தி சரபர். இரணியனைக்கொன்ற நரசிம்மத்தின் இரத்த வெறியை அழிக்கப் பெருமான் சரபப்பறவை உருவம் கொண்டார் என்பது வரலாறு. இம்மூர்த்தியை உபாசனை செய்வோர் பயம், பகை நீங்கி இன்புறுவர். பெருமான் கம்பகரேசுவரர் என்ற பெயரோடு விளங்குகிறார். அம்பிகை திருப்பெயர் அறம்வளர்த்தநாயகி.

5 **திருக்குவளை :—** சுந்தரமூர்த்தி சுவாமிகள் குண்டையூர்க்கிழார் தந்த நெல் மலையைத் திருவாரூருக்கு எடுத்துச்செல்ல இறைவனிடம் ஆள் வேண்டிப் பாடிய திருத்தலம். திருஞானசம்பந்தர் முதலிய மூவராலும் பாடப் பெற்றது. சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. தியாகரின் திருப்பெயர் அவனிவிடங்கத்தியாகர். நவக்கிரக தோஷங்கள் இத்தலத்தை வழிபாடுவார்க்கு இல்லை

என்பது வரலாறு. நாகப்பட்டினம் தாலூகாவில் திருவாரூரிலிருந்து அறந்தாங்கி செல்லும் இருப்புப்பாதையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏழுகல் தொலைவில் இத்தலம் விளங்குகிறது.

6. **திருவையாறு :—** பஞ்சநதம் என்றும் பூலோக கைலாயம் என்றும் போற்றப்படுவது. அப்பரடிகளுக்கு இறைவன் கயிலைக் காட்சி வழங்கிய சிறப்புடையது. திருஞானசம்பந்தர் முதலிய மூவராலும் பாடப்பெற்றது. சுந்தரருக்குக் காவிரி வழிவிட்ட தலம். ஆட்கொண்டார் சந்நிதி விசேஷமானது. இங்கு நடைபெறும் சப்தஸ்தானத் திருவிழா பெரும் புகழ் பெற்ற விழாவாகும். இறைவன் பஞ்சநதீசுவரர். இறைவி அறம்வளர்த்தநாயகி. இத் தலம் தஞ்சாவூருக்கு வடக்கே எட்டுகல் தொலைவில் காவிரியின் வடகரைத் தலமாக விளங்குகிறது

7. **ஆச்சான்புரம் :—** திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருமணம் நடைபெற்ற தலம் நல்லூர்ப்பெருமணம் என்று திருமுறைகளில் போற்றப்பெறுவது. திருஞானசம்பந்தர், திருமணத்திற்கு வந்திருந்தார் எல்லார்க்கும் இறைவன் சிவலோகம் வழங்கியருளிய வரலாறு இத் தலத்திற்குரிய தனிச் சிறப்பாகும் சீகாழி தாலூகாவில் கொள்ளிடமென்னும் புகைவண்டி நிலயத்திற்குக் கிழக்கே மூன்றுகல தொலைவிலுள்ளது.

8. **குறுக்கை :—** அஷ்டவீரட்டத்தலங்களில் காமனை எரித்த திருத்தலம். சம்காரமூர்த்தி சந்நிதி விசேஷம். இறைவன் பெயர் வீரட்டேசுவரர், அம்பிகை பெயர் ஞானம்பிகை. மாயூரமிருந்து சிதம்பரம் செல்லும் இரயில்

மார்க்கத்தில் நீடூர் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே ஐந்துகல் தொலைவில் இருக்கிறது.

9. மாயூரம்; குமரக்கட்டளை :— அம்பிகை மயிலுருவாய் இறைவனைப் பூசித்த தலம். இடப தீர்த்தம் எனப் பெறும் காவிரி தீர்த்தம் சிறப்புடையது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர் தேவாரப் பதிகங்களைப்பெற்றது. ஸ்ரீ மாயூரநாதராலயத்திலுள்ள முருகப்பெருமான் திருக்கோயில் நிர்வாகம் தருமையாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்டது.

10. மாயூரம் வள்ளலார்கோயில் :— திருநந்திதேவருக்கு இறைவன் தென்முகக் கடவுளாக இருந்து ஞானோபதேசம் செய்தருளிய தலம். காவிரியின் வடபால் அமைந்து விளங்கும் இத்தலத்தில் தக்ஷிணாமூர்த்தி மிகச் சிறப்புடைய மூர்த்தியாவர். இறைவன் வதான்யேசுவரர். இறைவி ஞானாம்பிகை.

11. மாயூரம் விசுவநாதசுவாமிகோயில் ;—மாயூரம் துலாக்கட்டத்திற்கு அருகில் இத் திருக்கோயில் விளங்குகிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் நூதனமாகத் திருப்பணி செய்விக்கப்பெற்று விளங்குகிறது, துலா மாதத்தில் காவிரி நீராடி இப்பெருமானை வழிபடல் பெரும் பயனைத் தரும். இறைவன் விசுவநாதர். இறைவி விசாலாட்சி.

12. திருமுல்லைவாயில் :— தென் திருமுல்லைவாயில் என வழங்கும் இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற சிறப்புடையது. இறைவன் முல்லைவனநாதர். இறைவி அணிகொண்டகோதை. கிள்ளிவளவன் வேட்டை

யாடச் சென்றபோது முல்லைக்கொடி தடுக்க அதனை வெட்டியபோது இப்பெருமான் வெளிப்பட்டதாக வரலாறு. சீகாழியிலிருந்து வடகிழக்கில் சுமார் எட்டுகல் தொலைவில் உள்ளது.

13. கருங்குயில்நாதன்பேட்டை :— மாயூரத்திற்குக் கிழக்கே விளங்கும் இத்தலத்தில் கார்த்திகை ஞாயிறு தோறும் நடைபெறும் காவிரி தீர்த்த விழா சிறப்புடையது. இறைவன் சக்திபுரீசுவரர். இறைவி ஆனந்தவல்லி. இது மாயூரம் துலாக்கட்டத்தின் வடகரையில் கிழக்கே ஒருகல் தொலைவில் உள்ளது.

14. மணக்குடி :— தருமபுரத்தை அடுத்து காவிரியின் வடபால் உள்ள தலம் மாயூரத்தில் கௌரி மயிலுருவாய்த் தம்மை வழிபடுவதை அறிந்த பெருமான் அவரை மணக்க எழுந்தருளியபோது தங்கிய தலம் இது. இறைவன் சுந்தரேசுவரர். இறைவி ஞானாம்பிகை.

15. குத்தாலம் :— சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஏற்பட்ட படர்நோய் நீங்கிய தலமாகும். திருத்துருத்தி என வழங்குவது. அம்பிகை முறைப்படி சிவபூசை செய்து இறைவனை மணம்புரிந்த தலம். சமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்ற சிறப்புடையது. தலவிருக்ஷம் உத்தாலமரம் இறைவன் திருப்பெயர், சொன்னவாறறிவார். இறைவி திருப்பெயர் அரும்பன்னவனமுலையார் இத்தலம் மாயூரமிருந்து கும்பகோணம் செல்லும் இரயில் மார்க்கத்தில் ஒரு புகைவண்டி நிலையமாக விளங்குகிறது. மாயூரமிருந்து கும்பகோணம் செல்லும் கற்சாலை வழியாகவும் செல்லலாம்.

16. திருநள்ளாறு :— நளனைப் பற்றியிருந்த சனி பகவான் விலகிய தலம். ஞானசம்பந்தர் அனல்வாதத்தில் இட்ட பச்சைத் திருப்பதிகம் இத்தலப் பதிகமாகும். நள தீர்த்தம் சிறப்புடையது. சனிக்கிழமைகளிலும் சனிப் பெயர்ச்சி நாட்களிலும் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் பல்லாயிரவர் வந்து வழிபடுவர். இறைவன் நள்ளாறர். இறைவி போகமார்த்தபூண்முலையாள். சப்த விடங்கத் தலங்களில் ஒன்று. தியாகர் நகவிடங்கத்தியாகர் இத் தலம் காரைக்காலுக்கு அண்மையில் விளங்குகிறது. பேரளம் காரைக்கால் இரயில் பாதையில் ஒரு புகை வண்டி நிலையமாக விளங்குகிறது.

17. திருத்தருமபுரம் :— ஞானசம்பந்தருக்கு யாழ்த் தொண்டு புரிந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் வேண்டு கோளின்படி ஞானசம்பந்தர் யாழ்மூரித்திருப்பதிகம்பாடித் திருமுறை, இசைக் கருவியிலடங்காதென்பதை வெளிப் படுத்திய தலம். காரைக்காலுக்கண்மையிலுள்ளது இத் தலம். இறைவன் திருநாமம் யாழ்மூரிநாதர். இறைவி மதுரமின்னமைமை.

18 விளநகர் :— மாயூரத்திற்குக் கிழக்கே உள்ள இத்தலம் ஞானசம்பந்தருக்குக் காவிரித் துறை காட்டிய தலம். கபித்தன் என்னும் அசுரனுக்குப் பிரமகத்தி தோஷம் நீக்கிய தலம். இறைவன் துறைகாட்டும்வள்ள லார். இறைவி காம்பனதோளியம்மை. மாயூரத்திற்குக் கிழக்கே ஐந்து கல் தொலைவிலுள்ளது.

19. திருப்பறியலூர் :— தக்கன் அம்பிகையை மக ளாகப் பெற்று மண்ணுலகம் வந்து வேள்வி செய்த தலம். அட்ட வீரட்டத் தலங்களில் தக்கனைச் சம்கரித்த தலம். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடப் பெற்ற

சிறப்புடையது. மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இருப்புப் பாதையில் செம்பொன்னார்கோயில் என்ற புகை வண்டி நிலையத்திற்குத் தென்மேற்கில் 1½ கல் தொலைவில் உள்ளது.

20. திருக்கருப்பறியலூர் :— மேலைக் காழி எனப் படும். இறைவன் குற்றம்பொறுத்தீசுவரர். இறைவி கோல்வளைநாயகி. இராவணன், அநுமன் முதலியோர் வழிபட்ட தலம். ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர்தம் தேவாரப் பாடல் பெற்றது. காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. மாயூரமிருந்து வடக்கே எட்டுகல் தொலைவில் உள்ளது.

21. திருநின்றியூர் :— திருமகள் வழிபட்ட தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்களை உடையது. இறைவன் லக்ஷ்மீ புரீசுவரர். மாயூரமிருந்து சீகாழி செல்லும் கற்சாலையில் வடக்கே 6 கல் தொலைவில் உள்ளது.

22. பேரளம் :— பேரள மகரிஷி என்பவர் தவஞ் செய்து வழிபட்ட தலம். இறைவன் சுயம்புநாதசுவாமி. இறைவி பவானியம்மை. மாயூரமிருந்து திருவாரூர் செல்லும் இருப்புப்பாதையில் புகைவண்டிப் பெருநிலைய மாய் விளங்குகிறது.

23. திருக்கற்குடி :— உய்யக்கொண்டான் மலைஎன்று வழங்கும் இத்தலம் திருச்சிக்கு அண்மையில் மேற்கே மூன்றுகல் தொலைவிலுள்ளது. இறைவன் உஜ்ஜீவன நாதர். இறைவி அஞ்சனாட்சி. மூவர் தேவாரப் பாடல் களையும் உடையது.

24. திருவாரூர் இராஜன்கட்டளை :- திருமாலும், தேவேந்திரனும் வழிபட்ட தியாகேசப்பெருமான் எழுந்தருளிய தொன்மையான தலம். திருவாரூர் தேர்த்திருவிழா பெரும் புகழ் பெற்றது. கோயிலுக்குப் பூங்கோயில் என்று பெயர். சுந்தரர் இத்தலப் பெருமானிடம் கொண்டிருந்த ஈடுபாட்டைச் சமய உலகம் அறியும். சமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்றது இத்தலம். கமலை ஞானப்பிரகாசர் இத்தலத்தில் அமைந்த சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில்தான் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கு ஞானோபதேசம் செய்தருளினார். பல்வகையாலும் சிறப்புடைய இத் திருக்கோயிலின் நித்யார்ச்சனைக் கட்டளைகள் அடங்கிய இராஜன் கட்டளை தருமையாதீனத்தின் ஆட்சிப் பொறுப்பில் பன்னெடுங்காலமாக உள்ளது.

25. திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் மௌனமடம் கட்டளை :— இத்தலம் திரிசிரன் பூசித்துப்பேறுபெற்றது. மகேந்திரவர்மப்பல்லவன் கட்டிய திருக்கோயில். சிரா முனிவர் வாழ்ந்த இடம் இறைவன் தாயுமானார். தாயுமானவர் கோயிலுக்கு அருகில் விளங்கும் திருமடம் இம்மௌன மடம். திருமூலர் மௌனகுரு இவர்களின் சந்தான பரம்பரையில் இம்மடம் விளங்கி வருகிறது. மௌனகுரு தாயுமானவர்க்கு உபதேசித்தருளிய இடம் இது. இத் திருமடம் தருமையாதீன ஆட்சிக்குட்பட்டு விளங்கிவருகிறது.


26. திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோவில் பிச்சக்கட்டளை :— மத்யார்ஜுனம் என்று போற்றப்படுவது இத்தலம். இத்தலத்தில் எழுந்தருளிய மகாலிங்கப் பெருமானை வழிபடுதல் பெரும்பயனைத் தரும். இத்தலத்தை வலம் வருதல் மேலானது. பைத்தியம் பிடித்தோர் இத்தலத்தில் ஒரு மண்டலம் தங்கி

வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர். சோழ மன்னனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். பத்திரகிரியார், பட்டினத்தடிகள் முதலானோர் இத்தலத்தில் வசித்துப் பேரின்பம் பெற்றனர். மூகாம்பிகை சந்நிதி விசேஷம். இத்தலத்திற்குரிய பிச்சக்கட்டளை தருமையாதீனத்துக்குட்பட்டது.


27. தருமபுரம் தருமபுரீசுவரர் கோயில் :— இயமன் பெருமான்மீது பாசம் வீசியகுற்றத்திற்குக் கழுவாய் வேண்டிப் பூசித்த தலமாக விளங்குகிறது. அகத்தியமுனிவரின் சீடர்கள் வழிபட்டு ஸ்ரீகுருஞானசம்பந்தரிடம் ஒப்படைத்த திருக்கோயில் இது. இறைவன் தருமபுரீசுவரர். அம்பிகை அபயாம்பாள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் எழுந்தருளுவிக்கப்பெற்ற ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில் இங்கு விளங்குகிறது. நவராத்திரி நாட்களில் நடைபெறும் சதசண்டி ஹோமம் சிறப்புடையது.

ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயில் :— இது திருத்தருமையாதீனத்தில் விளங்கும் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதியெய்திய இடமாகும். பரிவார தெய்வங்களுடன் சிவாகமவிதிப்படி நாள்விழாவும் சிறப்புத் திருவிழாவும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் நேர் பார்வையில் மிக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் காலத்தில் திருக்கோயிலாகக் கட்டப்பெற்றது, ஆதீன ஸ்தாபகர் குருபூசை விழாவையொட்டி மகோற்சவம் நடைபெற்றுவருகிறது. நாள்தோறும் காலையிலும் மாலையிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு செய்து வருகின்றார்கள், குருவாரந்தோறும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில்



வேம்படிமால் (தல விருக்ஷம்)




ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயில்

திருக்கற்குடி




ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில்

திருபுவனம்




ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில்

தலைஞாயிறு



ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில்

திருநின்றவூர்




ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி திருக்கோயில்

திருக்குவளை



ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில் (மேல்தளம்)

ஆச்சாள்புரம்




ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயில் முன்தோற்றமும் திருக்குளமும்

குத்தாலம்



ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில்

குறுக்கை




ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில்

திருவையாறு




ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயில்

கருங்குயில்நாதன்பேட்டை



ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில்

திருக்கடவூர்



ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சைவ சமயச் சார்பாக எழுதப்பெறும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சமயங்களின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்கள் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதுதல் வேண்டும். பழைய சந்தாதாரர்கள் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா எண்ணைக் குறித்தல்வேண்டும். ஏதேனும் விபரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் தலைகள் அனுப்புதல் வேண்டும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ 3—00] [வெளிநாடு ரூ 4—00

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :-

செயலாளர்,
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமையாதீனம்,
தருமபுரம், மாயூரம் *P. O.*